www.tamilarangam.net தந்துதவியவர்: தேசம்நெற்


# தமிழோசை

THAMIZHOSAI


உள்ளே....

* ஜோர்ஜ் கீற்....
* சிறுகதை
* புன்னகையின்..
* குன்ரர் கிராஸ்..
* பாலையின் குரல்
* சொல்லாரம்


ஓசை : 1 ஒலி : 13 ஆங்கீரஸ ஹு கார்த்திகை மீ 12ந் திகதி (27-11-1992) 253 Western Avenue London W3 0PP Tel: 44-(0)81-993 7652 Fax: 44-(0)81-993 8611

## வடக்கு - கிழக்கு இணைப்பு சுதந்திரக்கட்சி மறுப்பு

(நமது கொழும்பு நிருபர்)

இலங்கை நாடாளுமன்றத்தில் மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் தினேஸ் குணவர்த்தனா, ஐக்கிய தேசிய கட்சியினதும் வடக்கு, கிழக்கு மாகாணத்தின் இணைப்பைப்பற்றிய கொள்கைகளை வெளியேயுள்ள மக்களுக்கும், நாடாளுமன்றத்தினருக்கும் தெரிவிக்கும்படி சவால் விடுத்ததற்கு, எதிர்க்கட்சி தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா பதிலளிக்கையில் சுதந்திரக்கட்சி வடக்குக் கிழக்கு இணைப்புக்கு ஒரு காலமும், எந்த நிலையிலும் சம்மதிக்க மாட்டாது என்று பதிலளித்தார்.

முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப், ஜனாதிபதி பிரேமதாசாவும், சிறிமாவோ பண்டாரநாயக்காவும் பிரபாகரனுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி இந்த பிரச்னையை தீர்ப்பதற்கு ஒரு சுமுகமான முடிவை ஏற்படுத்தக்கூடாது என வினாவினார். இப்படியான ஒரு நிலை ஏற்படுத்தப்படாவிடில் இலங்கையில் யுத்தமோ அல்லது ஆயுதப் போராட்டமோ, கடைசித் தமிழன் அழியும் வரை நிறுத்தப்படமாட்டாது என்றும் விடுதலைப்புலிகளை மட்டும், கொழும்பிலோ மற்றும் எங்கும் நடக்கும் குண்டு வெடிப்புகளுக்கோ குறை சொல்ல முடியாது என்றும், பல்வேறு சக்திகள் இந்த சம்பவங்களை ஏற்படுத்த முயற்சிக்கலாம் என்றார். காட்டில் புலிகள் மட்டுமல்ல, அன்னிய உருக்களும் காணப்படலாம் என நாடாளுமன்றத்தை அவர் எச்சரித்தார்.

அதே நாளில் நாடாளுமன்றத்தில் பேசிய ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பொது காரியதரிசி சுரேஸ் பிரேமச்சந்திரா பேசுகையில் தமிழ் கட்சிகள் ஒன்றாக சேர்ந்து ஒரே குரலில் பேசச் சொல்லியவர்கள் தான், இன்று நாலு அம்சத் திட்டத்தை வைத்த ஏழு கட்சிகளையும் பிரிப்பதற்கு அதிதீவிர முயற்சிகள் எடுத்து வருகின்றன. தமிழரசுக் கட்சியும், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியும் திட்டத்தை முன்வைத்தபோது, எந்தவித கவனமும் கொள்ளாத அரசாங்கம், சிறிநிவாசன் ஒரு சமஸ்ட்டித் திட்டத்தை முன்வைத்த போது, அரசின் நீதி அமைச்சர் ஏ.சீ.எஸ்.ஹமீட் இன் தலைமையில் முஸ்லீம் எம்.பீக்கள் சந்தித்த போது, திட்டத்தை ஏற்றுக் கொண்டார்கள். இது தமிழ் கட்சிகளை பிரிப்பதற்கான ஒரு மாபெரிய சதித்திட்ட

(3ம் பக்கம் பார்க்க)



பிரித்தானியாவில் புதிய அகதிகள் சட்டத்தின் மூலம், அகதிகள் உரிமையை ஒடுக்கும் அரசின் கொள்கையைக் கண்டித்து, அகதிகள் உரிமைக்கான தற்காலிக அமைப்பு RAHCARன் ஏற்பாட்டில், 21ந் திகதி சனிக்கிழமை ஹைட் பார்க்கில் இருந்து றவல்கார் சந்திப்பு வரை, 5000க்கு மேற் பட்ட பல இன மக்கள் கலந்து கொண்ட ஊர்வலத்தின் ஒரு பகுதி

## பாதுகாப்புப்படை தளபதிகள் யாழ் விரைவு
## வடக்கில், இராணுவ நடவடிக்கைகள் தீவிரம்

(கொழும்பு நிருபர்)

**யாழ் குடாநாட்டில் மூன்று திசைகளில் சுப்பர் சோனிக் விமானங்கள் குண்டுகள் பொழிந்துள்ளன. வடமராட்சி - இடைக்காட்டில் இலங்கை இராணுவ முகாம் தகர்க்கப்பட்டது. வடபகுதி இராணுவ முகாம்களில் இருந்து இராணுவம் முன்னேற முயற்சி.**

வடக்கில், முல்லைத்தீவு, பரந்தன், கிளிநொச்சி உட்பட பல்வேறு பகுதிகளில் விமானப்படைகளின் சுப்பர் சோனிக் பொம்பர் விமானங்கள் கட்டுமாணமற்ற குண்டு வீச்சுக்களை நடாத்தியுள்ளன. ஆனையிறவைச் சூழ விமானத் தாக்குதல்களை மேற்கொண்ட விமானம் அங்கிருந்து பளை முகமாலை- புதுக்காடு ஊடாக படைகள் நகர முனைந்துள்ளன. கிளிநொச்சி, கச்சிலைமடு கிராமத்தில் விமானக் குண்டு வீச்சில், 6 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அதேவேளை யாழ் மாதகலில் முகாம்களில் இருந்து முன்னேறிய இராணுவத்தினர் சிறிது தூரம் நகர்ந்து, நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 25 கண்ணாடி இழைப் படகுகளை நிர்மூலமாக்கி திரும்பியுள்ளன.

திங்கள் நள்ளிரவு வடமராட்சி இடைக்காட்டில், அமைந்திருந்த இராணுவ முகாம் மீது- விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றை நடாத்தியுள்ளனர்.சுமார் 300 பேர் கொண்ட விடுதலைப் புலிகள் அணி ஒன்று, அதிகாலை வரை ஆறரை மணி நேரம் தொடுத்த இத்திடீர்த் தாக்குதலில், பலத்த மோதல் மூண்டுள்ளது. 45 இராணுவத்தினர் கொல்லப்பட்டு- 63 பேர் காயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில், முதல் நிலை இராணுவ பொறியியலாளர்கள், காப்டன் லால் அபேரத்ன, லெப்டினன் சம்பத் பெரேரா ஆகியோரது படைப் பிரிவு வீரர்களும் அடங்குவது- குறிப்பிடத்தக்கது. கூட்டுப் படைத் தலைமையக தகவலின்படி மோதலில் பலியான விடுதலைப் புலிகளில் 25 பெண் போராளிகள் உட்பட 35 பேரினது சடலங்களை கைப்பற்றியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முகாமில் இருந்து அனைத்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

வடமராட்சி பிரதேசத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள எல்லையில், முகாமில் அமைந்துள்ள பலம் மிக்க இவ் இராணுவ முகாமில் ஏற்பட்ட 45 இராணுவ வீரர்களின் இழப்பு குறித்து, விசாரணை மேற்கொள்ளவும், ஏனைய முகாம்களின் பாதுகாப்பு தொடர்பாக உசார்படுத்தவும், இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன, விமானப்படை பிரதம அதிகாரி, வைஸ்- மார்சல் ஒலிவர் ரணசிங்க ஆகியோர், புதனன்று யாழ்- பலாலிக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர். உயரதியாரிகள் குழுவுடன் ஆலோசனைக் கூட்டத்தை நடாத்தி, விசேட பணிப்புகள் வழங்கியுள்ளதாக அறியப்படு கின்றது.

இதே தினம், முல்லைத்தீவு, கொக்குத் தொடுவாய் பகுதியில், இரவு ரோந்தை முடித்து திரும்பிக் கொண்டிருந்த இராணுவ வாகனமொன்றின் மீது விடுதலைப்புலிகள் தாக்கி, 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டு, ஆயுதங்களும் கைப்பற்றப் பட்டன.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வவுனியா வடக்கு பிரதேச எல்லையில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் தடை முகாம் மீது செவ்வாய்க் கிழமை படைகள் தாக்கி 10ற்கு மேற்பட்ட விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர்.

தொடர்ந்து புதன்கிழமை, வவுனியா வடக்கு நோக்கி அரை மைல் தூரம் வரை தரைமார்க்கமாக படைகள் முன்னேறி, நொச்சி மோட்டை எல்லையில்,புதிய காப்பரண்கள், பங்கர்களை அமைத்து நிலை கொண்டுள்ளனர். அப்பகுதியில், பழுதடைந்த நிலையில் உள்ள பாலம் ஒன்றை திருத்தி அமைத்து, அப்பகுதி பாதுகாப்பை பலப்படுத்தியும் வருகின்றனர்.

வவுனியா நகரில் பாதுகாப்புகள் தொடர்ந்து பலப்படுத்தப்பட்டுள்ளதோடு, மிகக் கடுமையான சோதனை நடவடிக்கைகளும் அமுலில் இருந்து வருகின்றன.

கிழக்கு மாகாணத்தில், தமிழர், முஸ்லீம் கிராமங்களில், மாறி மாறி குண்டு வெடிப்புகளும், அச்சுறுத்தல்களும், தொடர்ந்து வரும் அதே வேளை, கிராமங்கள் அரச படைகளால் சுற்றி வளைக்கப்பட்டு, தமிழர்கள் கைது செய்யப்பட்டு, கொண்டு செல்லப்படும் சம்பவங்களும், ஓய்ந்தபாடில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஹொலன்டிற்கு பிரித்தானியர் செல்லத்தடை?

ஹொலன்ட், பிரித்தானிய பிரஜைகளை ஐரோப்பிய குழு நாடுகளுக்கு வெளியேயிருந்து வருபவர்கள் போன்றே கணிக்கப்போகிறது என்று பிரித்தானிய உள்நாட்டுத் துறை அமைச்சர் கெனத் கிளாக் ஐரோப்பிய பாராளுமன்ற குழுவொன்றுக்கு தெரியப்படுத்திய செய்தியை எதிர்த்து ஹொலன்டின் பிரதிநிதி ஒருவர் பிரிட்டனுக்கு எதிராக ஹொலன்ட் ஒரு தலைப்பட்சமான கொள்கை ஒன்றை கடைப்பிடிப்பதாக கூறப்படுவது அப்பட்டமாக எதிர்க்கப்பட வேண்டியது என்று கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் 1993 ஜனவரி 1ம் தேதி ஐரோப்பிய சமூகநாடுகளின் எல்லைக் கட்டுப்பாடு ஒழிக்கப்படுகிறது. பிரிட்டன். அயர்லாந்து, டென்மார்க்கை விட மற்றைய ஒன்பது நாடுகளும் ஐரோப்பிய சமூக நாடுகளின் வெளிப்புற எல்லைகளையே முக்கியமாக கருதுகின்றன. இந்த மூன்று நாடுகளும் தமது உட்புற எல்லைக் கட்டுப்பாட்டை ஒழிக்கும் வரை மற்றைய நாடுகள் இந்த நாட்டவரை ஐரோப்பிய சமூக நாடுகளுக்கு வெளியே இருந்து வருபவர்கள் போலவே கணிக்கப்படலாம் என்று கருத்துத் தெரிவித்தார்.

கெனத் கிளாக் இதற்கு பதிலளிக்கும் போது ஹொலன்ட் இந்த கொள்கைகளை நடைமுறைப்படுத்துவது செயல்படுத்த முடியாது என்றும், உதாரணமாக சிப்போல் விமான நிலையத்திற்கு மிகவும் கணிசமான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

# அமெரிக்காவிற்கு எதிராக ஐக்கிய நாடுகள் வாக்களிப்பு

அமெரிக்கா கியூபா மீதாக கையாண்டுவரும் வர்த்தக தடையை ரத்துச் செய்யக் கோரி ஐக்கிய நாடுகள் சபை அமெரிக்காவை கோரியுள்ளது. அண்மையில் கியூபா மீதான வர்த்தகத்தடையை அமெரிக்கா அதிகரித்ததனால் பல சிநேக நாடுகள் வருத்தம் தெரிவித்திருந்தன.

ஜனாதிபதி காஸ்ட்ரோ பதவி கைப்பற்றிய காலத்திலிருந்தே அமெரிக்கா இந்தத் தடையை விதித்திருந்தாலும் கடந்த மாதம் வெளி நாடுகளில் இருக்கும் அமெரிக்க வர்த்தக ஸ்தாபனங்களின் கிளைகள் அல்லது கூட்டுறவு ஸ்தாபனங்களும் கியூபாவோடு வர்த்தகம் செய்யக் கூடாது என்று விஸ்தரிக்கப்பட்டது.

கியூபாவுக்கு சென்ற எந்நாட்டுக் கப்பல்களும் ஆறுமாதங்களுக்கு எந்த அமெரிக்கத் துறைமுகத்திற்கும் அனுமதிக்கப்படமாட்டா என்ற அமெரிக்காவின் சட்டத்துக்கு, அமெரிக்காவுடன் மிக நெருங்கிய உறவுகள் வைத்திருந்த நாடுகளே எதிர்ப்புத் தெரிவித்தன.

ஐ.நா.பொதுச்சபையில் கியூபாவால் கொண்ட வரப்பட்ட இந்த பிரேரணை, 59 வாக்குகள் சாதகமாகவும் 3 வாக்குகள் எதிராகவும் நிறைவேற்றப்பட்டது. 71 நாடுகள், பிரித்தானியா உட்பட வாக்களிக்கவில்லை. கனடா, ஸ்பெயின், பிரான்ஸ், மெக்ஸிக்கோ ஆகிய நாடுகள் மசோதாவுக்காக வாக்களித்தன. அமெரிக்காவோடு இஸ்ரேயில், ருமேனியா மட்டுமே எதிர்த்து வாக்களித்தன.

பிரித்தானிய பிரதிநிதி தோமஸ் றிச்சாட்சன் பிரித்தானியாவைப் பற்றிப் பேசுகையில் அமெரிக்காவின் இந்தச் செயல் சர்வதேச சுதந்திர நாடுகளின் அரசுரிமைகளையும், சர்வதேச சுதந்திர நாடுகளின் அரசுரிமைகளையும், சர்வதேச சட்டங்களையும் அத்துமீறும் ஒரு செயலாகும் எனக் குறிப்பிட்டார்.

ஐ.நா.பொதுச் சபையின் இந்த பிரேரணைக்கு அமெரிக்கா கட்டுப்பட்டு நடக்கத் தேவையில்லை பாதுகாப்புச் சபை பிரேரணைகள் மட்டுமே அமெரிக்காவை கட்டுப்படுத்த உதவும்,என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.


SUNRISE RADIO
24 hr RADIO STATION
1413 KHz 212 MW
தமிழ் ஒலிபரப்பு

நிகழ்ச்சிகள்

30.11.92 திங்கள் இரவு
10.00 - 11.00 மணி

* செய்திகள்
* நினைவில் நிறைந்தவை
* வாழ்த்துவோம்
* அறிவிப்பாளர் விருப்பம்
* இசை இன்பம்





உலகப்பிரசித்தி பெற்ற
யாழ்ப்பாணத்து சோதிட பண்டிதர்
டாக்டர் கே.என்.நவரத்தினம்
M.A.F.A.S.A.A
* சாதகம்
* எண்சோதிடம்
* கைரேகை சாஸ்திரம்
ஆகியவற்றில் டிசம்பர் முதல் வாரம் வரை
லண்டனில் நேரடியாக ஆலோசனை வழங்குவார்.
தொடர்புகளுக்கு: 081-571 2104
நிரந்தர முகவரி 9, SAFFRON DRIVE,HALLAM 3803
VICTORIA, AUSTRALIA
TEL: (03) 796 3964 , (03) 796 4062



தமிழோசை

சந்தா படிவம்

தமிழோசை பத்திரிகையை அஞ்சலில் பெற கீழ்க்காணும் விண்ணப்பத்திரத்தைப் பூர்த்தி செய்து அதற்கான பணத்தையும் காசோலையாகவோ அல்லது தபாற் கட்டளையாகவோ அனுப்பி வைக்கவும்

(Please mark Cheques or Postal Orders Payable to "THAMIZHOSAI" )

Name: ______________________

Address: ______________________

______________________

______________________


______________________

Postcode: ______________________

Phone No: ______________________

| | UK / EUROPE | OTHER COUNTRIES |
|---|---|---|
| 12 Issues | £ 7.00 | £ 15.00 |
| 24 Issues | £ 12.00 | £ 30.00 |

Please send this form to
Circulation Dept.
THAMIZHOSAI
253 Western Avenue,
London W3 0PP
UNITED KINGDOM

# லண்டனில் தமிழ் பரீட்சை

கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தின் கல்விப் பொதுத் தராதர (சாதாரண) தமிழ்ப்பரீட்சை, லண்டனில் இரண்டாவது வருடமாக நவம்பர் 26ம் தேதி 3 நிலையங்களில் நடத்தப்பட்டது.

லண்டன் தமிழ் அகதமி ஊடாக, கொப்லன்ட் சமூக பாடசாலையில் நடந்த தேர்வில் எழுபது மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றினர். அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் பங்குபற்றியது இதுவே முதல் தடவையாகும்.

லண்டன் தமிழ் கழகம், தமிழ் மொழி கலைக் கழகம், திருவள்ளுவர் தமிழ் பாடசாலை, அல்பேட்டன் உயர் பாடசாலை, கோப்லண்ட் சமூக பாடசாலை, (பெட்போட்), இங்கிறம் உயர் பாடசாலை, ஆகிய பாடசாலைகள் கோப்லன்ட் சமூக பாடசாலையில் நடந்த தேர்வில் கலந்து கொண்டனர்.

பாரத வித்திய பவன், தெற்கு லண்டன் தமிழ் பாடசாலை, மேற்கு லண்டன் தமிழ் பாடசாலை ஆகியன ஏனைய நிலையங்களில் தோற்றின.

லண்டன் தமிழ் கழகத்தின் இயக்குநர் டாக்டர் இ.நித்தியானந்தன் இப்பரீட்சையைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், பெற்றோரும் அதிகமான பாடசாலை அதிபர்களும் தமிழ் மொழி ஒரு பாடமாக்க ஊக்கமளிப்பது மகிழ்ச்சிக்குரியது என்றும் கூறினார்.

மிகவும் கிட்டிய எதிர்காலத்தில் லண்டனில் அனைத்து தமிழ் மாணவர்களும் தமிழ் மொழியில் எல்லாப் பாடங்களையும் கற்கும் நிலை வரும் என எதிர்பார்ப்போம்.


# லண்டனில் ரெயில்கள் மோதல்

நவம்பர் 25ந் தேதி லண்டனில் காலை 7.30 மணியளவில் சரிங் குறொஸ் ரயில் நிலையம் நோக்கி வந்த ரெயின் ஒன்றும் சரிங் குறொஸிலிருந்து வெளியேறிய ரெயின் ஒன்றும் நேரடியாக மோதியதால் இருபதுக்கும் மேற்பட்டோர் காயமுற்றனர். இந்த சம்பவம் லண்டன் பிறிஜ் அருகாமையிலுள்ள பறோ சந்திப்பில் நடந்துள்ளது.

இச்சம்பவத்தினால் நான்கு லண்டன் ரயில் நிலையங்கள் பலமணி நேரங்களாக மூடப்பட்டிருந்தது. பிரிட்டிஷ் ரயில் இதற்கான விசாரணை உடனே ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்தலில் தெரிவித்துள்ளது.

# சாயி பாபா பிறந்தநாள் கொண்டாட்டம்

விம்பிள்டன் கணபதி ஆலயத்தின் எல்லைக்குள் இருக்கும் "சாயி மந்திர்"இல் ஆயிரத்துக்கும் மேற்



பட்ட பக்தர்கள் சாயி பாபாவின் அறுபத்தி ஏழாவது பிறந்த தினத்தை பக்திப் பரவசமாக கொண்டினார்கள்.

பகவானின் 1008 நாம அர்ச்சனையைத் தொடர்ந்து விசேஷமாக தெரிந்தெடுக்கப்பட்ட இருபத்தியொரு பஜனைகளை பக்தர்கள் எல்லோரும் பண்ணோடு இசைத்தார்கள். மலர்களால் அலங்கரிக்கப்பட்ட சாயிபாபாவின் உருவப் படம் மலர் ஊஞ்சலில் ஆடிய வண்ணம் இருந்தது.

மூலஸ்தானத்தில் இருக்கும் சாயிபாபா, சிருதி பாபாவின் சிலைகள் மலர்களாலும் மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டும் இருந்தன.

மந்திருக்குகள் இடம் கிடைக்காத பக்தர்கள் தர்ம நிலையத்திலும், பிரேம நிலையத்திலும் குவிந்து, நேரில் காண முடியாத காட்சிகளை, பெரிய 'ரெலிவிஷன்களில்' கண்டு பக்திப் பரவசமானார்கள்.

பஜனைகளின் பின் பாபாவுக்கு தீபாரதனையோடு, பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கிய பின்பு இரவு 10 மணியளவில் நிறைவுற்றது.

பிரித்தானியாவின் பல பகுதிகளிலும் சாயி பாபா பக்தர்கள் இதே போன்று பிறந்த நாளைக் கொண்டாடினர். வருடா வருடம் கொண்டாடுவோர் தொகையும் கூடிக்கொண்டே போகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தேசிய ஒருமைப்பாட்டு கூட்டம் பா.ஜ.க. பகிஸ்கரிப்பு

டெல்லி நவ 21

அயோத்தி பிரச்னை குறித்து திங்களன்று நடைபெறப் போகும் தேசிய ஒருமைப்பாட்டுக் கூட்டத்தை பாரதிய ஜனதாக் கட்சியும் விஸ்வ ஹிந்து பரிசாத்தும் பகிஸ்கரிக்கும் என்று பா.ஜ.க. தலைவர் முரளி மனோகர் ஜோஷி செய்தியாளர் களுடன் பேசும்போது தெரிவித்தார். விஸ்வ ஹிந்துப் பிரசாத்தின் இணை பொதுச் செயலாளர் கிரிராஜ் கிஷோர் கூறும்பொது சமுதாயத்தின் ஒரு பிரிவு பிரதிநிதிகளை மட்டும் திருப்திப்படுத்தும் நோக்கத்துடன் தேசிய ஒருமைப்பாட்டு மன்றம் உருவாக்கப்பட்டுள்ளது.

டிசெம்பர் மாதம் 6ம் தேதி யன்று கரசேவையை மீண்டும் தொடங்குவதற்கு முடிவு செய்துள்ள மையால், அதை தடுக்கும் முடிவுடன் தான் மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

ஜனதா கட்சியின் மாகில அரசை 26ம் தேதியே, மத்தியஅரசு கலைத்து விடமுயலலாம் என்றும் கூறினார்.

கரசேவையை நிறுத்த மத்திய அரசுடன் எந்தவித பேச்சுவார்த்தைக் கும் தயாரில்லை எனவும், உத்தரப் பிரதேச அரசு கைப்பற்றிய 2.77. ஏக்கர் நிலத்தில் திட்டமிட்டபடி கரசேவைப்பணிகள் துவங்கப்படும். சர்ச்சைக்குரிய கட்டிடத்தில் எந்த சேதமும் வராமல் பார்த்துக் கொள் வோம் என்றும் உறுதி கூறினார். மத்திய உள்துறை அமைச்சர் சவான், மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அர்ஜுன் சிங், பாதுகாப்புத்துறை அமைச்சர், சரத் பவார் மேற்கொண்டு அரசு என்ன செய்ய வேண்டும் என்று கடந்த சனியன்று ஆலோசனையில் ஈடு பட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை உயர் நீதிமன்றம் நவம்பர் 23ம் தேதி மதியம் இரண்டு மணிக்கு முன்பாக, மத்திய அரசின் நிலைமையை வினாவி, அரசின் வழக்கறிஞர் அன்று கட்டாயமாக நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உயர் நீதிபதிகள் வெங்கட செல்வாவும், றேயும் அவர்களது கட்டளையில் தெரி வித்தனர்.

# காஞ்சி பெரியவரின் நூறாவது பிறந்தநாள்

காஞ்சி சங்கராச்சாரியார் சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளுக்கு அடுத்த ஆண்டு (1993), மே மாதம் ஏழாம் தேதி நூறாவது வயது பிறக்கிறது. இந்த பிறந்தநாள் விழாவைச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் இப்போதிருந்தே நடைபெறத் தொடங்கியிருக்கின்றன. இதற்காக இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவர் ஆர்.வெங்கட்ராமனைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இக் குழு விற்கு நடுப்பெரியவர் ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் தலைவராக இருப்பார். காஞ்சிப் பெரியவரின் நூறாவது பிறந்த நாளுக்கு 1008 தங்கக்காசுகளால் 'கனகாபிஷேகம்' நடத்தப்படவிருக்கிறது. காஞ்சிபுரத் தில் இந்த அபிஷேகம் நடைபெறும். ஒவ்வொரு தங்கக் காசும் இரண்டு கிராம் எடையில் செய்யப்படுகிறது. பக்தர்கள் 1008 தங்கக்காசுகளையும், காஞ்சிப் பெரியவரின் பொற்பாதங் களில் 1008 முறை 'போற்றி' சொல்லி அர்ச்சனை செய்வார்கள். இந்தக் கனகாபிஷேகத்துக்காக ஆயி ரம் பவுண் தங்கம் நன்கொடையாகத் திரட்டப்படுகிறது. அபிஷேகத்துக் குத் தேவையான தங்கம் போக மீதி தங்கம் நன்கொடையாகத் திரட்டப்படுகிறது. அபிஷேகத் துக்குத் தேவையான தங்கம் போக மீதி தங்கம் காஞ்சிகாமாட்சி யம்மன் மூலஸ்தான கூரை சீரமைப்பு பணி, ஆதி சங்கரர் சன்னதிக்குத் தங்கக் கூரை வேய்தல், காமாட்சி யம்மனுக்கு தங்க சிம்ம வாகனம் அமைத்தல் போன்றவற்றுக்காக பயன்படுத்த முடிவு செய்யப் பட்டிருக்கிறது. ஒரு பவுன் தங் கமும், அதற்கு மேலும் நன்கொடை தரும் பக்தர்களுக்கு கனகாபிஷேக பூஜையில் வைக்கப்பட்ட தங்கக் காசும், பிரசாதமும் வழங்கப்படும்.

# அவுஸ்திரேலியா தலையீடு

1990ம் ஆண்டில் அவுஸ்தி ரேலியா அரசாங்கம் முன் வைத்த சமாதான திட்டத்தைப்பற்றி சுதந் திரக்கட்சி எம்.பி.ஜெயராஜ் பெர் னாண்டோ பிள்ளை, நாடாளு மன்றத்தில், ஏன் அரசாங்கத்துக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில், யுத்தத்தைத் தவிர்ப்பதற்காக சமா தானப் பேச்சு வார்த்தைக்கு நடு நிலை வகிக்கக் கூடாது என்ற கேள்விக்கு, பிரதமர் விஜே துங்க பதிலளிக்கையில் நாம் உள்நாட்டி லேயே பிரச்னையை தீர்ப்பதற்கு முயற்சி எடுத்துக் கொண்டி ருக்கையில், வெளிநாடுகள் தலையீடு தேவைப்படவில்லை என்று கூறி னார்.

விஜேதுங்கா 1990இல் அனைத்து கட்சி மாநாடு நடக்கும் போது தான் அவுஸ்திரேலியாவின் பிரதமர், பொப் ஹொக், இந்த பிரேரணையை சமர்ப்பித்தார், அதனால் தான் நாங்கள் வெளி நாட்டு சமாதானத்தை அங்கீ கரிக்கவில்லை. இப்போது நாடாளு மன்ற தெரிவுக்குழு இந்த பிரச் னைக்கு தீர்வுகாண எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது. ஆதலினால், வெளிநாடுகளின் சமா தானம் முயற்சியை அரசு தேட வில்லை என்றும் குறிப்பிட்டார்.

நவம்பர் 4ம் தேதி அவுஸ்தி ரேலிய மேல் சபை கேட்ட கேள் விக்கு அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஹரத் இவான்ஸ் பதில ளிக்கையில் தாங்கள் இலங்கை அரசையும், விடுதலைப்புலிகளையும் பேச்சு வார்த்தையின் மூலம் நாட் டின் பிரச்னைகளை தீர்க்கும்படி வற்புறுத்துவதாகவும், பொது நல நாடுகள் அமைப்பின் நடுநிலைமைக் கான எந்தவித உதவியையும், சமா தான நிலைமைக்காக, நாம் செய்யத் தயார் என ஒருதலைப்பட்சமாக தான் கூறியது உண்மைதான் என் றும், ஆனால் பிரதமமந்திரி ஹோக், ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு இதைக் கடிதமூலமாக 1990, செப் ரெம்பர் 11ம் தேதி ஊர்ஜிதம் செய்துள்ளார் எனவும் குறிப் பிட்டார்.

இன்றும் இரண்டு பகுதியும் சம்மதித்தால் அவுஸ்திரேலியா முற்போக்கு நடவடிக்கைகளை எடுக்க தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார். இந்த பொது நல நாடுகள் அமைப்பின் ஈடுபாடு இலங்கை அரசாங்கத்தின் விண் ணப்பத்திலேயே ஆரம்பிக்கலாம் என்றும் ஊர்ஜிதப்படுத்தினார்.

# சந்திரலேகா விவகாரம்: மூன்று மந்திரிகள் மீது சுவாமி புகார்

ஐ.ஏ.எஸ். அதிகாரி சந்திர லேகா மீது திராவகம் வீசப் பட்டதில் தமிழக அமைச்சர்கள் மூவருக்குத் தொடர்புள்ளது என்று ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிர மணியம்சாமி தெரிவித்தார்.

சென்னையில் சனிக்கிழமை யன்று நிருபர்களுக்கு பேட்டி அளித்த அவர், அந்த மூன்று அமைச்சர்களின் பெயர்களை டிசம் பர் முதல் வாரத்தில் வெளியிடுவ தாகச் சொன்னார்.

மத்திய அமைச்சர் சவானை, சந்திரலேகா டெல்லியில் சந்தித்த பின்பு தான், சந்தேக நபர்களை பொலீசார் பம்பாயில் கைது செய் துள்ளனர்.

ஆறு மாதங்களுக்கு முன்னரே இந்த நடவடிக்கையை சென்னை நகர பொலீஸ் கமிஷனர் ராஜ கோபாலன் மேற்கொண்டிருக்கலாம். இதன் மூலம் கடமை செய்யத் தவறிய குற்றத்துக்கு ஆளாகிறார்.

பம்பாயில் உள்ள சுர்லாவையும் அவனது ஆட்களையும் கைது செய்யக்கோரி பம்பாய் பொலீ சாரை சென்னை பொலீசார் கேட்டுக்கொண்டதாக பம்பாயில் ஆதாரம் ஏதுமில்லை. எனவே இந்த சதிவேலையில் சம்பந்தப் படாமல் இருக்க பொலீஸ் கமிஷனர் விரும்பினால் இவ்விஷயத்தில் மேற் கொண்டு தொடர் நடவடிக்கையை விரைவாக அவர் மேற்கொள்ள வேண்டும். இல்லையென்றால் கடமை செய்யத் தவறியதாக அவர் மீது வழக்கு தொடருவேன் என்றும் சுப்பிரமணியசாமி கூறினார். சந்திர லேகாவின் ராஜினாமாவை ஏற்க வேண்டாம் என்று தமிழக செய லாளர் அனுப்பிய பரிந்துரைக்கு மாறாக அவர் பதவி விலக அனுமதி அளித்த மத்திய அரசை பாராட்டுகிறேன். நாடாளுமன்றத் தில் பாரதீய ஜனதா கட்சியை அ.தி.மு.க ஆதரித்தால் அக்கட்சியை இரண்டாக உடைப்பேன். தற்போ தும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் 6,7 பேர் எனக்கு ஆதரவாக உள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இந்தப் பேட்டியின் போது முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு, பி.எச்.பாண்டியன், பாலா பழனூர், இளையபெருமான், சந்திரலேகா ஆகியோரும் உடனிருந்தனர். வெள் ளத்தால் வீடுகளை இழந்தவர்களுக்கு கேரள அரசு ரூ.5000 கொடுக்கிறது. ஆனால் தமிழக அரசு வெறும் 500 ரூபாய்தான் தருகிறது. இது போதாது என்றும் கேரளத்தைப் போல இங்கும் 5000ரூபாயை வீடிழந்தவர்களுக்குத் தர வேண்டும் என்று திருநாவுக்கரசு கூறினார்.

# தலைநகரில் தமிழ் இளைஞர்களைத் தேடி வேட்டை

வடபகுதி இளைஞர்கள் கொழும் பிலும், சுற்றுப்புறங்களிலும், குண்டு களை வெடிக்க வைக்க திட்ட மிட்டுள்ளார்களென்றும், பொது மக்களை விழிப்பாக இருக்கும் படி யும் இலங்கை அரசு எச்சரித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டது. இவ் அறிவிப்பு வெளியான மூன்றாம் நாள், கொழும்பு காலிமுகத்திடல் அருகில், தற்கொலை குண்டுத் தாக்குதலில், இலங்கை கடற்படைத் தளபதியும் சகாக்களும் கொல்லப் பட்டனர். அதனைத் தொடர்ந்து, ஜனாதிபதி செயலாளரின் மெய்க் காப்பாளர் சந்தேகமாக நடமாடிய இளைஞரை விசாரிக்கச் சென்ற வேளை சுடப்பட்ட சம்பவம் உட்பட வேறும் பல ஆயுத நபர்களின் நட மாட்டங்கள் சந்தேகிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டன.

இச்சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே- தலைநகரி லும் சுற்றுப்புறங்களிலும், தமிழர் களிற்கு சொந்தமான வீடுகள், விடுதிகள், வியாபார ஸ்தலங்கள், மற்றும் தமிழர்களின் வசிப்பிடங்கள் அனைத்தும் பாதுகாப்புப்படை களின் கூட்டு சோதனை நடவடிக்கை களிற்கு இலக்காக்கப்பட்டு வந்தன. சந்தேகமானோர், அடையாள அட் டைகள் இல்லாதோர், பெயர்களை பொலீஸ் நிலையங்களில் பதிவு செய்து கொள்ளாதோர் என 1000க் கணக்கான இளைஞர், யுவதிகள், பொலீஸ் நிலையங்கள், இராணுவ விசாரணைக் கூடங்கள், தடுப்பு காவல் நிலையங்கள் போன்றவற் றிற்கு விசாரிப்பதற்கென அழைத்துச் செல்லப்பட்ட வண்ணம் உள்ளனர். ஒரு வார காலத்தில் கொழும்பின் வெவ்வேறு பகுதிகளில் கைது செய்யப்பட்டோர் தொகை 4000ற்கும் அதிகம் என கூறப்படு கின்றது.

எரிகின்ற நெருப்பில் வார்க்கும் எண்ணெயாக, கொழும்பில், முக்கிய அரசியல் தலைவர்கள், அதிகாரிகள், பலரை கொலை செய்வதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து இரு கொலைக் குழுக்கள் கொழும்பில் ஊடுருவி இருப்பதாக இலங்கை புலனாய்வுத் துறையின் செய்தி அமைகின்றது. கூடவே முஸ்லீம் கட் சித் தலைவர்கள் கொலை அச்சுறுத் தல்களுக்கு ஆளாகி இருப்பதாக செய்திகள் வெளியாக்கப்பட்டு, தமிழர்கள் மீதான கெடுபிடிகள் மேலும் கூர்மையாக்கப்பட்டுள்ளன.

கொழும்பு குண்டு வெடிப்பிலும், துப்பாக்கிப் பிரயோகத்திலும், இனம் காணப்பட்ட நபர்களது வீடுகள் சோதனையிடப்பட்டபோது, பெறப்பட்ட ஆதாரங்கள் தகவல் களின் அடிப்படையிலும், மேலும் கைது செய்யப்பட்ட இளைஞர், யுவதிகளின் வாக்கு மூலங்களின் படியும், வரையறையற்ற கைது நடவடிக்கைகளிற்கு அரசு நியாயங் களை காட்ட முனைகின்றது.

செவ்வாயன்று, மட்டக்களப்பு முகத்துவாரம் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் பொலீசாரால் கைது செய்யப்பட்ட கல்முனை வாசியான சுரேஸ் அவருடன் வந்த பெண் ஆகியோரின் தகவல்களின் படி,கொழும்பில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள பல கொலை களின் விபரங்கள் போலீசாரால் வெளியாக்கப்பட்டு, கொழும்பில் தமிழ் இளைஞர்களின் பாதுகாப்பு மேலும் கேள்விக் குறியாக்கியுள்ளது.

இராணுவத் தலைமைகள், முஸ் லீம், சிங்கள தலைவர்கள், ஏனை யோரின் சுமூக வாழ்க்கை, கொலைக் களமாக்கப்படுவதை, மிகப் பெரிய அளவில் சாதக மாக்குவதில், பல சக்திகள் இன்று முனைப்படைந்துள்ளன. சம்பந்தப் பட்டவர்கள் விழிப்படைவார்களா? மும்முனை நசுக்கல்களில் இருந்து தமிழர்கள் பாதுகாக்கப்படுவரா? பதில்கள் கேள்விக்குறியாகி நீண்டு வளர்கின்றன!

## கொழும்பில் பெய்ரூட் புலிகள்

கொழும்பில், முக்கிய பிரமுகர் கள், அரசியல் வாதிகள் பலரை கொலை செய்யும் நோக்கோடு, பெய்ரூட் குறியீட்டுப் பெயர் கொண்ட நாட்டில் விசேட பயிற்சி பெற்ற 30 புலி உறுப்பினர்கள் கொழும்பினுள் ஊடுருவி இருப்பதாக புலனாய்வுத் துறையினர் அறிவித் துள்ளனர். மட்டக்களப்பு என்பதற்கு ஆங்கிலத்தில் 'பெய்ரூட்' என்று குறியீடு பாவிக்கப்பட்டமை பின்னர் தெரிய வந்தது.

இதனை அடுத்து சகல உயர்மட்ட அதிகாரிகள், அரசியல் வாதிகள், மற்றும் முக்கிய பிரமுகர்களிற்கு இரட்டிப்பு பாதுகாப்பு வழங்கப் பட்டதுடன், அவர்களது இருப்பிடங் கள், பாவிக்கும் வாகனங்கள் என்ப வற்றை அடிக்கடி மாற்றும் படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விசேட பாதுகாப்பு நடவடிக்கை களை அமுல்படுத்த- விசேட அதிர டிப் படைப்பிரிவு சேவையில் ஈடு படுத்தப்பட்டுள்ளது. முப்படைகளு டன், ஆயுதம் தாங்கிய பொலீசார் நகரின் மூலை முடுக்குகளெங்கும் நிறுத்தி வைக்கப்பட்டு சோதனைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

வட, கிழக்கில் இருந்த புதிதாக வந்து தங்கியிருப்போர் பற்றி பொலீசாருக்கு அறிவிக்கத்தவறும், இருப்பிடச் சொந்தக்காரர்கள், அவ சரகாலச் சட்டத்தின் கீழ் கடும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவர் என அரசு எச்சரித்துள்ளது.

தற்கொலைத் தாக்குதல் அச் சுறுத்தல்களை முன்னிட்டு, கொழும் பில் உள்ள இந்தியத் தூதரகத்தைப் பாதுகாக்க இவ்வாரம் இந்தியப் படைப்பிரிவு அனுப்பப்படுகிறது. இதேபோல ஏனைய வெளிநாட்டு தூதரகங்களினதும் பாதுகாப்பை பலப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

## வடக்கு-கிழக்கு ....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மென்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கம் மக்களுக்கு சமஸ்டித் திட்டத்தைப் பற்றிய அவர்களது கருத்துக்களையும் அதை ஆதரிக்கிறார்களா இல்லையா என் றும் கூறவேண்டும் என்றும், இந்தப் பிரச்னை சமாதானத்தின் போர் வையில் இன்னும் அதிககாலம் இழுபடக்கூடாது என்று கூறி குறுந் தபட்சமாக வடக்கு- கிழக்கு இணைப்பு இல்லாவிடின் இன்னமும் இருபது வருடங்களானாலும் இந்த ஆபத்தான நிலைக்கு முடிவே கிடையாது எனவும் எச்சரித்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செய்திச் சரம்

19.11.92

## வேலூர் சிறையில் கைதிகள் தப்பினர்

கனத்த மழை காரணமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டதால், தமிழ்நாடு வேலூர் இருளில் மூழ்கியுள்ளது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 19 இலங்கைத் தமிழ் கைதிகள், சாதுர்யமாக, சிறைக் கூரையில், கம்பமொன்றைக் கட்டி அதன் வழியே ஏறி குதித்து தப்பிச் சென்றுள்ளனர்.

அடுத்த சில மணி நேரத்துள், தகவல் வெளிப்பட்டு பொலீசாரும், படைகளும் உசாரடைந்து அப்பகுதி முழுவதும் கைதிகளைத் தேடி வலை விரித்துள்ளனர். 5 பேர் பின்னர் பிடிபட்டதாக பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மக்கள் மீளக் குடியமர்வு

முல்லைத்தீவு மாவட்ட அலம்பில் பகுதியில் நிலைகொண்டிருந்த, ஸ்ரீலங்கா இராணுவ முகாம் முடப்பட்டு இராணுவம் வெளியேறியதைத் தொடர்ந்து அப்பகுதி சுற்று வட்டாரங்களில் இருந்து அச்சத்தினால் வெளியேறிய பொது மக்கள், ஆயிரக்கணக்கில், மீளக் குடியேற ஆரம்பித்துள்ளனர். இருப்பினும், முகாம் சுற்றுப் புறங்களில், இரு தரப்பினராலும் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலக்கண்ணி வெடிகள் காரணமாக, அச்சத்துடனேயே நடமாடுகின்றனர்.

20.11.92

## நீதிமன்றில் குண்டு வீச்சு

கொழும்பு பிரதான மாவட்ட நீதிமன்ற வழக்கு விசாரணை ஒன்றிற்காக கொண்டு வரப்பட்ட கைதிகள் நீதிமன்ற கைதிகள் பாதுகாப்பறையினுள் வைக்கப்பட்டிருந்த சமயம், இனம் தெரியாத நபரினால் அக்கட்டிடம் மீது குண்டு வீசித் தாக்கப்பட்டுள்ளது. இதனால் நீதிமன்ற நடைமுறைகள் சிலமணி நேரம் அல்லோலகல்லோலப்பட்டதுடன், ஐந்து கைதிகளும், நான்கு சிறைக்காவலர்களும் காயமடைந்துள்ளனர்.

## கடத்தலில் கைது

தமிழ்நாடு இராமநாத புரத்தில் இருந்து மண்ணெண்ணெய் மற்றும் பெற்றோல் போன்றவற்றை மன்னாரிற்கு கடத்தி வந்த 6பேர் தலைமன்னார் கடலில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் சிங்களவர், இருவர் இலங்கைத் தமிழர், மற்றைய மூவர் இராமநாதபுரத்தைச் சேர்ந்தவர்கள்.

## மெய்க் காப்பாளர் சுடப்பட்டார்

இலங்கை ஜனாதிபதியின் செயலாளர், விஜயதாஸவின் திம்பிரிகஸ்யாய வீட்டின்முன் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய தமிழ் இளைஞர் ஒருவரை, விஜயதாஸவின் மெய்ப்பாதுகாவலர், அருகில் சென்று விசாரிக்க முயன்ற வேளை, அவ் இளைஞர் துப்பாக்கியால் சுட்டுவிட்டு தலைமறைவாகியுள்ளார். இவர் விட்டுச் சென்ற பை ஒன்றினுள், ஏ.கே.47 மகசின் ஒன்றும், இரு கிரனைட்டும் காணப்பட்டுள்ளன.

21.11.92

## கிளாலி கடலில் தொடர்ந்து வேட்டை

யாழ் குடாநாட்டை வெளி மாவட்டங்களுடன் இணைக்கும் ஆனையிறவு தரைப்பாதை இழுபறி நிலையில் தொடர்ந்தும் முடப்பட்டிருக்கும், அதே வேளை மாற்று வழிப்பாதையான கிளாலி கடல் ஏரிப்பாதை, படைகளின் தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுகளிற்கு இலக்காகி வருகின்றன.

வேறு வழியின்றி, அப்பாதையூடாக அத்தியாவசிய தேவைகளை ஏற்றிச் செல்லும் படகுகள், போராளிகள் என்ற சந்தேகத்தில், அடிக்கடி தாக்கி மூழ்கடிக்கப்படுகின்றன.

சுமார் 4 லட்சம் ரூபா பெறுமதியான மண்ணெண்ணெய் பீப்பாய்கள் ஏற்றி வந்த 3 படகுகளை நோக்கி ஹெலி கொப்டரொன்று அண்மித்த வேளை, படகுகளை கைவிட்டு படகோட்டிகள் மூவரும் கடலினுள் குதித்து தப்பியுள்ளனர்.

## கடத்தல், கொலைகள் ஓய்ந்தபாடில்லை

தொடர்ச்சியாக முத்தரப்பு இன்னல்களைக் கண்டு வரும், மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையில், மாலை வேளை புகுந்த ஆயுத இளைஞர்கள் சிலர், இரு வீடுகளில் இருந்த 4 இளைஞர்களை வெளியே அழைத்து, இருவரை அவ்விடத்திலேயே சுட்டுக் கொன்றதுடன், மற்றைய இருவரை கொண்டு சென்றுள்ளனர். தகவல் கொடுத்தார்கள் என காரணம் சொல்லப்பட்டுள்ளது.

22.11.92

## படைகள் முன்னேறித் திரும்பின

ஆனையிறவிற்கு மேற்கே கடற்கரை அண்மித்த வெற்றிலைக் கேணி கிராமத்தினூடு, ஸ்ரீலங்காப் படைகள் விமானங்கள் உதவியோடு தரைமார்க்க நகர்வுகளை மேற்கொண்டன. வடக்குப் புறம் நோக்கி சுமார் 1500 மீற்றர் தூரத்தை, எவ்வித எதிர்ப்புமின்றி கடந்ததாக கூறும் படைகள், அப்பகுதிகளில் விடுதலைப் புலிகளால் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட பல காப்பரண்களை தாக்கி அழித்துவிட்டு, அன்று மாலையே பழைய நிலைக்கு திரும்பி வந்துள்ளன.

## பார்சல் குண்டு செயலிழப்பு

மட்டக்களப்பு மண்டூரில் இருந்து கல்முனை புறப்பட்ட பயணிகள் பஸ் வண்டியினுள், இருந்த தேங்காய் சாக்குக்குள் பார்சல் குண்டு ஒன்று வைக்கப்பட்டிருந்தது தற்செயலாகக் கண்டு பிடிக்கப்பட்டது. இத்தகவல், அப்பகுதி விசேட அதிரடிப்படையினர்க்கு உடன் கொடுக்கப்பட்டு, அப்பார்சல் குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டு, பின்னர் பிரயாணத்தைத் தொடர அனுமதி க்கப்பட்டது.

## பதவி நீக்கம்

இலங்கையின் பிரதான எதிர்க் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவ இழுபறி சர்ச்சையின் ஒரு கட்டமாக, அதன் உபதலைவர், சூரியப் பெருமா, மத்திய சபையில் இருந்து கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவினால், பதவி நீக்கம் செய்யப்பட்டார். இழுபறி மேலும் தொடர்கிறது.

23.11.92

## தடை முகாம் தாக்கு

வவுனியா மாவட்ட வடக்குப் பகுதியில்,

நொச்சிமோட்டையில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் தடை முகாம் மீது அதிகாலை வேளையில் அரச படைகள் மேற்கொண்ட தாக்குதலில், இருவர் கொல்லப்பட்டு, நால்வர் காயமடைந்துள்ளனர்.

## கொழும்பில் இந்தியப் படைகள்

கொழும்பில் அதிகரிக்க ஆரம்பித்துள்ள குண்டுத் தாக்குதல் சம்பவங்களை அடுத்து, அங்குள்ள இந்திய தூதராலயத்திற்கு பாதுகாப்புகளை பலப்படுத்தும் நோக்கோடு, இந்திய அதிரடிப் படைப் பிரிவொன்று விரைவில் கொழும்பு செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## யாழ் கப்பல் சேவை ஆரம்பம்

அதிக நாட்களாக திட்டமிடப்பட்டு வந்த திருகோணமலை யாழ்ப்பாணம் இடையேயான பயணிகள் கப்பல் சேவை தனது முதல் சேவையை திருமலையில் இருந்து ஆரம்பித்தது. வாரத்தில் ஒரு தடவை இருவழிப் போக்காக நடைபெறும் இச்சேவையின் தொடர்ச்சி வாரம் ஒரு தடவை திருமலை கொழும்பு இணைப்பு சேவையாகவும் இணைக்கப்படவிருக்கின்றன. ஒவ்வோர் தடவை பயணத்தின்போதும், சுமார் 100 பயணிகள், தம் பொதிகளுடன் பயணம் செய்யவும் இச்சேவை இடமளிக்கிறது.

24.11.92

## ரேடியோவிற்குள் குண்டு

மட்டக்களப்பு நகரில் பொலீஸ் நிலையம் முன்பாக அமைந்திருந்த ரேடியோ பழுதுபார்க்கும் கடை ஒன்றில், 11.30 மணியளவில், எதிர்பாராத விதத்தில் குண்டு ஒன்று வெடித்து, கடை உரிமையாளர் ஆனந்தன் பலியாகினார். பழுது பார்க்க அனுப்பப்பட்ட ரேடியோ ஒன்றினுள் இருந்த குண்டென சந்தேகப்படுகிறது. சுமார் 3 வாரங்களின் முன்பு மற்றொரு ரேடியோ கடை ஒன்றில் இதே விதத்தில் வெடித்த குண்டொன்றிற்கு முஸ்லீம் உரிமையாளர் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## புலிகள் வீடு சுற்றிவளைப்பு

காலை 7.30 மணியளவில் மட்டக்களப்பு ஆரையம்பதியில் சந்தேகத்திற்கிடமான வீடொன்றை படைகள் சுற்றிவளைத்தபோது,வீட்டினுள் இருந்து இரு புறங்களில் துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டுள்ளன. தொடர்ந்து அங்கு மூண்ட மோதலில், வீட்டினுள் இருந்த இருவரும் கொல்லப்பட்டு, மூன்று படையினர் காயமடைந்துமுள்ளனர்.

## அரசியற் பிரிவுத் தலைவர் தற்கொலை?

அரச படைகள், மட்டக்களப்பு துறை நீலாவணையில் மேற்கொண்ட தேடுதலின் போது விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு தெற்குப் பிராந்திய அரசியல் பொறுப்பாளர் யோகன், சயனைற் 'அருந்தி' தற்கொலை செய்து கொண்டுள்ளதாக அரசு அறிவித்தது.

## பிரான்ஸ் அரசு வெற்றி

பிரான்ஸ் நாடாளுமன்றம், அமெரிக்காவின் பொது வியாபார வரி ஒப்பந்தம் பற்றிய சமாதான நிபந்தனைக்கு எடுத்த முடிவில், பிரான்ஸ் நாடாளுமன்றம் 50 மேலதிக வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டது. நேற்று இந்த வாக்கெடுப்பை முன்னிட்டு பிரான்ஸில் விவசாயி டிராக்ரர்களால் பாரிஸ் நகரின் பல பகுதிகளில் வாகனப் போக்குவரவை ஸ்தம்பிக்க வைத்தார்கள். அமெரிக்க ஸ்தாபனங்களான கொக்கோ– கோலா மற்றும் மக்டொனாட்ஸ் ஆகியவை தாக்குதலுக்கும், பஸ்கரிப்புக்களுக்கும் குறியாக்கப்பட்டன.

பிரதமர் வாக்கெடுப்புக்கு முன்பு மந்திரிசபைக்கு உரையாற்றுகையில், ஒப்பந்தம் மே மாதம் அங்கீகரிக்கப்பட்ட ஐரோப்பிய சமூக நாடுகளின் பண்ணைத் திட்டத்துக்கு சமமாக இருத்தல் வேண்டும் என்றும் இல்லாவிடில் பிரான்ஸ் இந்த ஒப்பந்தத்தை தடைசெய்யும் என்றும் கூறினார்.

## £ 50,000 சன்மானம்

ஜெர்மனியில் சமீபத்தில் தீக்கிரையாக்கப்பட்ட துருக்கிய பெண்ணையும் இரண்டு சிறுமிகளையும் கொலை செய்தவர்களை அடையாளம் காட்டுபவருக்கு £ 50,000 சன்மானம் கொடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஜெர்மனிய அரசு £ 15,000 மட்டும் கொடுக்க சம்மதித்த போதும், ஒப்பல் கார் நிறுவனம் மீதிப்பணத்தைக் கொடுத்து இத்தொகையை அதிகரித்துள்ளது.

ஒப்பல் கார் நிறுவனத்தில் வேலை செய்யும் 10 விகிதத்துக்கு அதிக மானோர் வெளிநாட்டவர்கள் என் றும், ஜெர்மனியின் கார் உற்பத்தித் தொழிலுக்கு இந்த வெளிநாட்டுத் தொழிலாளிகள் அளித்த சேவைக் காக இந்தப்பணம் கொடுக்கப்பட் டுள்ளது என்று ஒப்பல் நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

துருக்கிய வியாபாரிகள் வருமானவரி செலுத்த மாட்டோம் என்று இச்சம்பவம் பற்றி கண்டனம் தெரிவித்தபோது கூறினார்கள்.

துருக்கி, ஜெர்மன் அரசை கண்டித்து அதிககார பூர்வமான கண்டனம் தெரிவித்துள்ளதோடு, இறந்த குடும்பத்துக்கு நஷ்ட ஈட்டுத் தொகையும் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுள்ளது.

யூதர்களினதும், ஜிப்சிகளினதும் பேச்சாளர்கள் அதிபர் கெல்மெற் கோலையும் அவரது அரசையும் இப்படியான தாக்குதல்களை தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டியுள்ளார்.

## இலங்கை கடற்படைக்கு புதிய தளபதி

இலங்கை கடற்படையில் 21 வருட சேவையை முடித்துக் கொண்டிருக்கும் றெயர் அட்மிரல் மோஹான் சமரசேகர (44 வயது) புதிய தளபதியாக திங்களன்று பதவியேற்றார்.

கடந்த 16ம் தேதி தற்கொலைத் தாக்குதலில், கொல்லப்பட்ட முன்னாள் தளபதி வைஸ் அட்மிரல் கிளான்சி பெனாண்டோவின் வெற்றிடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள இவர், 12வது கடற்படைத் தளபதி என்பதுடன், உயர் பதவி வகிப்போரில் மிக வயது குறைந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா படை நீண்ட கால சேவை பதக்கத்தையும், வடமராட்சி இராணுவ பதக்கத்தையும், சிறப்பு கௌரவமாகப் பெற்ற இவர், வட, கிழக்கு யுத்தத்தில், தீவிர அக்கறை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

## உரைகல்

ஆசிரியர் அவர்கட்கு,

முதற்கண் என் அன்பு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். யூலை மாதம், 'தமிழோசை'யின் முதலிதழ் தபால் மூலம் கிடைத்தது. பிறகு, அடுத்தது வரவில்லை. பாரிசில் எங்கு தேடினும் வாங்க முடியவில்லை. ஆகவே, நான் உங்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டதன் விளைவாக, 'ஒலி 11' வரை வரப் பெற்று, வாசித்து அக மகிழ்ந்தேன். செய்திகள், அரசியல்– இலக்கியக் கருத்துக்கள், சிறு கதைகள் முதலியவற்றை இவ்வளவுச் சிறப்பான முறையில் பதிப்பித்து, நற்பெயர் பெற்று வரும் உங்கள் அனைவருடைய பெருமுயற்சிகளுக்கு என் மனமுவந்த பாராட்டுதல்கள்.

இலங்கைத் தமிழர் பற்றிய செய்திகள் பற்றிய செய்திகள் மட்டுமில்லாமல், உலகத் தமிழர் அனைவர் பற்றியும் எழுதுவதையும், இலக்கியப் பகுதியை இவ்வாறே சீரிய முறையில் தொடர்வதையும் நான் வரவேற்கின்றேன். முடிந்த வரை, விளம்பரம் அதிகமாகப் போகாமலும், சினிமாப்படம் போன்ற விமர்சனம் பகுதிகள் மிகாமலும் பார்த்துக் கொண்டு, "தமிழோசை"யின் தரத்தை மேல் நிலையிலே வைத்துக் கொண்டு, பகுத்தறிவுத் தமிழ் வாசகர்களை என்றும் சிந்திக்க வைக்கும் கட்டுரைகளால் பரவசப்படுத்த வேண்டி முடித்துக் கொள்கிறேன்.

*M.Gobalakichenane*
*91400, Orsay*
*France.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழோசை

லண்டன் நவம்பர் 27, 1992

# மதப் பூசல்களும் மனிதப் பலியெடுப்புகளும்!

தொன்று தொட்டுத் தொடரும், பழைமை வாதங்கள் தெய்வத்திற்கு நரபலியிடும், மனித நிந்தையை இன்னும் பல பாகங்களில் வழமையாக்கி வருகின்றன.

இதே பழமைகள், நாகரீக வளர்ச்சியில், பரிணாமம் பெற்று மதத்தின் பெயரால், மனிதப் பலியெடுப்புகளாக உலகின் பல பாகங்களிலும் இராஜதந்திரங்களாக வழமை பெற்று வருகின்றன.

மதங்களின் பெயரால், உலகில் பல்வேறு நாடுகளில் எத்தனையோ அட்டூழியங்கள், ஆட்சியுடமை ஆக்கப்பட்டு இருக்கின்றன. பதவியில் இருப்போரும், பதவிக்கு வர நினைப்போரும், வெகு சுலபமாக காரியங்களை பலவீனப்படுத்தி, தம்மை பலப்படுத்த, மதமே இன்று உலகில் ஆட்சிப் பொருளாகியுள்ளது. இதை உலகின் ஒவ்வோர் நாடுகளிலும், அதன் பிரச்னைகளை அலசும்போது நன்கு புலப்படும்.

இந்தியாவில், இன்று மத்திய அரசியலையே ஆட்டிப் படைக்கும் வலிய சக்தியாக, மதப் பூசல்களும் அதன் எதிரொலிகளும், பூதாகரமானதாய் எழுந்து நிற்கின்றன. மத உத்தரவுகளுக்கு பக்தர்கள் என்ற பெயரில், மக்கள் கூட்டம், அழிவை எதிர்பார்த்து காத்திருக்கின்றது. கோழியா, முட்டையா முதல் வந்தது என்ற சிக்கல், முடிவே கிடையாது என்று தெரிந்தும், பல தரப்பினரால், அழிவை நோக்கி முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

இலங்கையில், பெரும்பான்மை அதிகாரம், ஆட்சியில்,முதல் நிலை பேண மதவாதம், சட்டமும் சகலதுமாக்கப்பட்டிருக்கிறது. அங்கே இது வழி தவறுமானால், மதவாதிகள் ஆட்சியை ஆட்டிப் படைக்க வீதிக்கு வருவர். அது விபரீதங்களை உண்டு பண்ணும், என்பதால், ஆட்சியாளர்கள் தம்மை சிம்மாசனமாக்கி, அதன் மேலே மதவாதத்தை ஆட்சிப் பீடமேற்றுவதை முதல் வேலையாக்குவது வழமையாயிற்று.

தீர்வற்றுத் தொடரும் இனப் பிரச்னையில், சினந்தெழும் சிறுபான்மையை சீரழிக்க, மதம் ஏவுகணையாக்கப்பட்டுள்ளது.

பிரித்தாளும் இந்த இராஜ தந்திரம் மிக நன்றாகவே தன் பணி செய்கிறது. ஓர் மொழி பேசும் தனி இனம் மதத்தின் பெயரால் பலவீனப்படுத்தப்பட்டு, இரத்தக் கறைகளை ஓட விட்டு- தெரிந்தும், தெரியாமல் கல்லறைகளை சமைத்துக் கொண்டிருக்கின்றன. பாரம்பரியமாக வாழ்ந்தவர்கள் விரட்டியடிக்கப்பட்டார்கள். தஞ்சம் கொடுப்பதாக கூறிய அதே மதத்தவரும், காட்சிப் பொருளாக்கி சாதகங்களைத் தேடுகின்றனர். சகோதரர்களாக வாழ்ந்தவர்கள், கிராமப் படுகொலைகளை விலையாக்கி வேறாய் நிற்கின்றனர். தூபமிட்ட அடிப்படை மதவாதம் சிரித்து நிற்கின்றது.

இந்தியாவில் இருந்து மதத்தின் பேரால் துரத்தப்பட்டவர்கள் பாக்கிஸ்தான், வங்காள தேசம் ஆகிய நாடுகளில், மதத்தின் பேரால், சொந்த இனத்தவர்களால் நசுக்கி ஒடுக்கப்படுகின்றனர். ஒரே மதத்திற்குள்ளும், சாதி, வகுப்பு பிரதேச பிரிவினைகளால் மனித நேயம் கருவறுக்கப்படுகின்றது.

மத்திய தரை நாடுகளும், மேலை நாடுகளும், தமக்குள்ளும், வெளியிலும், மதத்தின் பேரால் போருக்கு தூபமிடுகின்றனர். அமைதியில் ஆளும் நாடுகளில், இனங்களின் மத்தியில், போருக்கு தூபமிட, மதங்களை உசுப்பி விடுகின்றன.

இப்படி பல்வேறு கோணங்களில், பரிணாமங்களில், மதம், அதனை வழிநடத்துபவர்களால், தலைவர்களால், அரசியல் வாதிகளால், ஆட்சி ஆயுதங்களை துணை கொண்டு, அழிவின் ஆணிவேராய் தழைத்து ஓங்கி நிற்கின்றன.

இவற்றின் எதிரொலிப்புகளிற்கும், பிரதிபலிப்புகளிற்கும் குறியாக்கப்பட்டு, பலி கொள்ளப்படுபவர்கள், அப்பாவி பொது மக்களன்றி வேறு எவராக இருக்க முடியும்? மதம் அதிகாரம் பெற்ற தலைமைகளின் வழி நடத்தலில் தம்மை மறந்து இறுதியில் தம்மையே இழக்கும் பக்தர்களும், மக்கள் தான். யார் ஆண்டால் நமக்கென்ன என்று ஓட்டாது வாழ்வை ஓட்ட நினைத்து, சூழ நடப்பது இன்னவென்பதறியாது, பிறர் சூழ்ச்சி வலைக்கு பலியாகுபவர்களும் மக்கள் தான்.

பிரிந்து ஆண்டு, வெற்றி கண்டவர்களும், அதை கண்டு தொடர புரிந்து கொண்டு, பின்வந்தவர்களும், தொடர்ந்து ஆண்டு காட்டப்போவது மீண்டும் இதைத்தான்.

இதை புரிந்து கொண்டு, சிந்தித்து, காண பேசி- உரக்க குரலெழுப்பி, மாற்றம் காண விடையாய் அமைபவர்கள் யார்? அன்றில் மாற்றம் தான் எப்படிக் காண முடியும்? இவற்றிற்கு பதில் காண காலம் எப்போ வரும்?

# நெருக்கடி நிலையின் போது இந்திராவுக்கு ஏற்பட்ட பழி

நெருக்கடி நிலையின் போது சில மத்திய அமைச்சர்களும் சில மாநில முதலமைச்சர்களும், தங்களது சொந்த ஆதாயத்துக்காக அவசரச் சட்டத்தை துஷ்பிரயோகம் செய்தனர். அப்போது பிரதமராகவிருந்த இந்திரா காந்தி அதற்கான பழியைச் சுமக்க நேரிட்டது.

இந்தத் தகவலை, முன்னாள் குடியரசுத் துணைத்தலைவர் பி.டி. ஜாட்டி வெளியிட்டுள்ளார்.

நெருக்கடி நிலைமைக்காலத்தின் இறுதிக்கட்டத்தில் பக்ருதீன் அலி அகமட்டிற்குப் பின் தற்காலிகமாக பொறுப்பு வகித்த இவரின் சுய சரிதையில் இத்தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அண்மையில் வெளியிடப்பட்ட 'நானே எனக்கு முன்னோடி' என்ற அவரது சுயசரிதையில் மேலும் சில தகவல்கள் காணப்படுகின்றன.

"நெருக்கடிநிலையின் ஆரம்ப கட்டத்தில் நாடு முழுவதும் அமைதி நிலவியது. எல்லாத்துறைகளிலும் பணிகள் சுமுகமாக நடைபெற்றன. இரண்டாவது கட்டத்தில் சில அமைச்சர்கள் மற்றும் சில மாநில முதலமைச்சர்களின் நடவடிக்கைகளால் ஒரு அளவுக்கு இந்திரா காந்தி தனது செல்வாக்கை இழக்க நேரிட்டது. அப்போது தான் பொதுத்தேர்தலை நடத்தி அவர் தோல்வியடைந்தார்.

1977 தேர்தலில் காங்கிரஸ் முதல் தடவையாகத் தோல்வியைத் தழுவி, மொரார்ஜி தேசாய் பிரதமராகப் பொறுப்பேற்க வழிவகுத்தது.

1977 மார்ச் 20ந் திகதி இந்திரா என்னைச் சந்தித்தார். அப்போது நெருக்கடி நிலையை வாபஸ் பெற்றுவிடலாமா? என்று கூட விவாதிக்கப்பட்டது. 'இப்போது நீங்கள் பிரதமாராக இருக்கிறீர்கள். நெருக்கடி நிலையை வாபஸ் பெறுவது தொடர்பாக அமைச்சரவையில் விவாதித்து முடிவு செய்யலாம்' என்று நான் கூறினேன்.

அன்றிரவே அமைச்சரவை கூட்டப்பட்டு, நெருக்கடி நிலையை முடிவுக்குக் கொண்டு வரும் பரிந்துரை குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டு அது ஏற்கப்பட்டது" என்று ஜாட்டி கூறியுள்ளார்.

## 9 மாநில பேரவைகள் கலைப்பு

மக்களவைத் தேர்தல்களில் காங்கிரஸைத் தோற்கடித்த 9 மாநில சட்டப்பேரவைகளைக் கலைத்துவிடுமாறு அப்பேதைய உள்துறை அமைச்சர் சரண்சிங்கின் பரிந்துரையின் மீது முடிவெடுக்க தமக்கு பத்து நாட்களுக்கு மேலாகியது ஏன் என்பது பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"9 மாநிலங்களில் நிச்சயமற்ற நிலை நிலவுகிறது, அம்மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சியில் நீடிப்பது சரியல்ல. அங்கு காங்கிரஸ் புதிதாக மக்கள் தீர்ப்பைப்பெறவேண்டும், என்று சரண்சிங் நினைத்தார்.

சரண்சிங்கின் திட்டத்தை பீகார், ஹிமாசலப் பிரதேசம், மத்திய பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் மாநில முதல்வர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

இத்திட்டத்திற்கு எதிராக இம்மாநிலங்கள் உச்சநீதிமன்றத்தில் மனுச் செய்தன. 1977, ஏப்ரல் 21ந் திகதி உச்சநீதிமன்றத்தின் அரசியல் சட்ட பெஞ்ச் அம்மனுவை நிராகரித்தது."

"அப்போதைய உத்தரப்பிரதேச ஆளுனரான சென்னா ரெட்டி, உள்துறை அமைச்சர் சரண்சிங்கை ஏப்ரல் 21ந் திகதி சந்தித்த பிறகு என்னிடம் வந்தார். '9 மாநில அமைச்சரவைகளைக் கலைக்கும்படியான யோசனை அரசியல் சட்டத்துக்கு எதிரானது. ஆகவே இப்பரிந்துரை சரியல்ல' என்று சரண்சிங்கிடம் கூறியதாக ரெட்டி என்னிடம் கூறினார். ஆனால் சரண்சிங் தன்னிலையிலிருந்து மாறவில்லை."

"9 மாநில அமைச்சரவைக்களைக் கலைக்கக்கோரும் மத்திய அமைச்சரவைத் தீர்மானம் ஏப்ரல் 29ந் திகதி என்னிடம் வந்தது. இவ்விஷயத்தில் எனக்கு சிந்திக்க சிறிது அவகாசம் தேவையென்று உள்துறைக்கு தெரிவிக்குமாறு என் செயலாளரிடம் கூறினேன்."

"இது தொடர்பாக பிரதம மந்திரி அன்றைய தினமே என்னைச் சந்தித்தார். 'மாநில அமைச்சரவை




களைக் கலைக்க தங்களது ஒப்புதலைத் தெரிவித்து விட்டீர்களா?' என்று பிரதமர் கேட்டார். 'இல்லை' என்றதும் அவர் விடைபெற்றுச் சென்று விட்டார்."

"அடுத்த நாள் சரண்சிங்கும் சட்ட அமைச்சர் சாந்திபூஷணும் என்னிடம் வந்தனர். '9 மாநில பேரவைகளின் பதவிக்காலம் 1978 மார்ச்சில் முடிகிறது. அதுவரை அவை தொடர ஏன் அனுமதிக்கக் கூடாது?' என்று அவர்களிடம் நான் எடுத்துக்கூறினேன்."

"அவர்கள் அதனை ஏற்கவில்லை. இம்மாநிலங்களில் சட்டம் ஒழுங்கு திருப்தியளிப்பதாக இல்லை. மாநிலத்தின் நிதி ஆடம்பரமாக செலவிடப்படுகிறது. ஆகவே பேரவைகளைக் கலைக்கும் எண்ணம் சரியானதே என்று அவர்கள் கூறினர்."

"மீண்டும் அமைச்சரவையில் இவ் விஷயத்தை ஆராய்ந்து முடிவு சொல்லுமாறு அவர்களிடம் கூறினேன். அன்று பகல் மூன்று மணிக்குக் கூடிய அமைச்சரவைக் கூட்டம் 9 மாநில பேரவைகளைக் கலைக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியது."

"இம்முடிவை அமைச்சரவைச் செயலர் மாலை 5 மணிக்கு என்னிடம் தெரிவித்தார். இது தொடர்பான சாதக பாதகங்களை ஆராய்ந்த பிறகே இம்முடிவு எடுக்கப்பட்டதாக அவர் என்னிடம் கூறினார். 9 மாநிலப் பேரவைகளைக் கலைக்கும் ஒப்புதலை இரவு 7.30 மணிக்கு நான் தெரிவித்தேன்" என்று ஜாட்டி மேலும் தெரிவித்துள்ளார்.



# கலவரத்தில் போலிசார் காயம்

(ஜேர்மனி)

இறந்த துருக்கியர்களுக்காக 4000 இடதுசாரிகள் இன்று எதிர்ப்பு ஊர்வலம் நடத்தியபோது, 350க்கு மேற்பட்டவர்கள் பொலீசார் மீது கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியதால், இவர்களுக்கும் பொலீசாருக்கும் கலவரம் மூண்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கலவரத்தில் 4 பொலீசார் காயப்பட்டதாகவும், 20 பேர் தடுப்புக் காவலில் வைத்திருக்கப்பட்டதாகவும் மேலும் குறிப்பிடப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# SHANKAR

## நத்தார், புதுவருட, பொங்கல்

பண்டிகைகளை முன்னிட்டு

## 01-12-1992 முதல் 15-01-1993 வரை

விஷேட

# மலிவு விற்பனை

தமிழ்த்திரைப்பட **AUDIO, CD** ஆகியன
மொத்த விற்பனை விலையில்

அத்துடன்

## இலங்கைத் தயாரிப்புகள்

பதனிடப்பட்ட மீன் வகைகள், மரக்கறி வகைகள், அரிசி மா,
மிளகாய்த்தூள், சகலவிதமான பலசரக்குப் பொருட்கள்

என்பவற்றுக்கு

## லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்

# SHANKAR & CO LTD

231 NORTHOLT ROAD, SOUTH HARROW, MIDDLESEX, U.K.

PHONE: 081 426 8960 FAX: 081-861 5248

www.tamilarangam.net

# புன்னகையின் பொருள்

## சுஜன்

"சிரிக்காமல் பின்னே அழச் சொல்கிறாயா? நானும் அழத் தொடங்கினால் என்ன ஆகும்? என் உள்ளமும் உடலும் பாதிக்கப்பட்டு, நானும் படுக்கையில் விழுந்து விட்டால். அப்புறம் என்னையே நம்பியிருக்கும் ஜீவன்களின் கதி என்ன ஆகும்? விதியை நொந்து அழுவதைவிட, விதியின் விளையாட்டை ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு, சிரித்துக்கொண்டே கடமையைச் செய்கிறேன்".

ஆயிரம் தெய்வங்களை வேண்டிக்கொண்டு அலுவலகத்தில் என் இருக்கையில் வந்து அமர்ந்து, கவலையுடன், வேண்டா வெறுப்பாக ஃபைல்களைப் புரட்டினேன்.

யாரைப் பார்க்கக்கூடாது என்று நினைத்துக் கொண்டிருந்தேனோ அந்தப் பழிகாரப் பாவி சொல்லி வைத்தாற்போல் அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் அழைப்பில்லாமல் ஆஜரானான்.

"என்னடா சுந்தரம், இழவு வீட்டுக்குப் போய் வந்தது போல்...?" அவன் முடிக்கு முன்னரே, "ஐயோ குரு, ஏற்கெனவே நொந்து போயிருக்கிறேன். அச்சான்யமாக வேறு எதுவும் தயவு செய்து பேசாதே, உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்" என்றேன்.

"சுந்தரம், நீ என்னை அடித்தால்கூடப் பொறுத்துக் கொள்வேன். ஆனால், உன் கவலையின் காரணத்தைத் தெரிந்து கொள்ளாமல் இங்கிருந்து நகரமாட்டேன். இல்லாவிட்டால் என் மண்டையே வெடித்துவிடும்."

காலைச் சுற்றிய பாம்பு கடிக்காமல் போகாது என்பது எனக்கும் தெரியும், அவனுக்கும் தெரியும். வேறு வழியின்றிக் காலையில் நடந்த விஷயத்தை அப்படியே சொன்னேன்:

என் பத்து வயதுப் பெண் மைத்ரேயி கிணற்றடியில் சறுக்கி விழுந்து காலில் பலமாக அடிபட்டுக்கொண்டாள். இரண்டே நிமிடங்களில் வீக்கம் அதிகமாகிவிடவே, என் மனைவி பயந்துபோய், அழ ஆரம்பித்துவிட்டாள்.

ஓரே ஓட்டமாய் ஓடி ரிக்ஷாவை அழைத்து வந்து குழந்தையைக் கைத்தாங்கலாகப் பிடித்து ஏற்றித் தெரு முனையில் உள்ள கிளினிக்கில் சேர்ந்தேன்.

"மிஸ்டர் சுந்தரம்,ஒன்றும் பயப்பட வேண்டாம். இன்னம் கொஞ்ச நேரத்தில் எக்ஸ்ரே எடுத்துப் பார்க்கிறேன். மாலை வாருங்கள் ரிசல்ட் சொல்கிறேன்" என்று டாக்டர் தைரியம் சொல்லி என்னை அலுவலகம் அனுப்பி வைத்தார்.

நான் சொன்னதைக் கேட்டதும் குரு கொஞ்சம்கூட அலட்டிக்கொள்ளாமல் சொன்ன பதில் இதுதான்:

"ஏய் முட்டாள்! இதற்காகவா இப்படிக் கவலைப்படுகிறாய்? எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டுப் பேசாமல் வேலையைக் கவனி."

பாவிப் பயலுக்குத் துளிகூட ஈரமில்லாமல் தெய்வம் நெஞ்சைத் துடைத்து வைத்திருக்கிறதே. தனக்கு வந்தால் தான் துன்பமா?– என்று என் நெஞ்சம் குமுறியது.

இப்படி அநேக முறைகள் அவன் நடந்துகொண்டிருப்பதை நான் கண்டிருக்கிறேன்.

வயதான காலத்தில் தனக்கு உதவியாக இருப்பான் என்ற நம்பிக்கையில் வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி, பணத்தைச் செலவழித்துப் படிக்க வைத்த தன் மகன் குறைந்தபட்சம் பள்ளி இறுதித் தேர்வில் முதல் பத்து மாணாக்கர்களில் ஒருவனாகவாவது வருவான் என்று நம்பியிருந்த டெஸ்பாட்ச் தண்டபாணி, தன் மகன் பரீட்சையிலேயே தேறவில்லை என்று தெரிந்து கொண்டபோது, அடிபட்ட மரம் போல பாரிச வாயுவில் விழுந்துவிட்டார். தள்ளாடித் தள்ளாடி ஆபீசுக்கு வந்தபோது எங்களால் முடிந்தவரை நானும் மற்ற அலுவலக நண்பர்களும் ஆறுதல் சொன்னோம். ஆனால் குருமூர்த்தியோ,

"என்ன தண்டபாணி என்னவோ பெரிய விபத்தில் பையன் உயிர் போய்விட்ட மாதிரி வருத்தப்படறீங்க. இந்த வருஷம் உங்களுக்குக் காலேஜ் ஃபீஸ் மிச்சம்னு நினைச்சுக்குங்க. ஆமாம்.... இப்ப படிச்ச கழுதைகள்ல, எல்லாக் கழுதைகளுமா வயசான காலத்திலே பெத்தவங்களைக் காப்பாத்தறாங்க. எப்போ பையனுக்குப் படிப்பிலே அக்கறையில்லையோ, இப்பவே வேலைக்குப் பட்டாளத்து வீரனைப் போலப் படை எடுக்கச் சொல்லுங்க..." என்றான்.

இன்னும் இரண்டு நிமிடங்கள் அவன் தொடர்ந்து பேசியிருந்தால், நானே அவனைக் கொலை செய்திருப்பேன்.

மாதக் கடைசியில் ஒரு நாள் மணி பர்சை பஸ்ஸில கோட்டை விட்டு வந்த லெட்ஜர் கிளார்க் சண்முக முதலியார், ஸ்டேட் பாங்க் ஃபைனல் இண்டர்வியூவில் ஏமாற்றமடைந்த டெலிபோன் ஆபரேட்டர் சாந்தி–யாரும் அவன் நக்கல் பேச்சிலிருந்து தப்பவில்லை. இன்று என் மடியிலும் கையை வைத்துவிட்டான்.

அலுவலகம் முடிந்தவுடன் நைந்த உள்ளத்துடன் கிளினிக்குக்கு ஓடினேன்.

நல்லவேளை, தெய்வம் என்பக்கம் இருக்கவே குழந்தை மைத்ரேயிக்குப் பெரிய ஆபத்து ஒன்றும் ஏற்படவில்லை. வீக்கம் குறைவதற்கு மட்டும் இருபது ரூபாய்க்கு மாத்திரைகள்!

ரிக்ஷாவில் வீட்டுக்குத் திரும்பி வரும்போது, குழந்தை ஏதோ ஆவலாகச் சொல்ல விரும்பவே, அவள் முகத்தை நோக்கினேன்.

"அப்பா, நான் உங்களிடத்தில் சொல்லவே மறந்துட்டேம்ப்பா. நாளைக்குப் பள்ளிக்கூட ஆண்டு விழாப்பா. அதோட பெற்றோர் தினவிழாவும் நாளைக்கே நடக்கிறதப்பா. பக்கத்து வீட்டு காயத்ரி, அப்புறம் ஆஷா, எதிர் வீட்டு ஜயந்தி இவங்க அப்பாவெல்லாம் காலையிலிருந்தே பள்ளிக்கூடத்தில் விழா ஏற்பாடுகளையெல்லாம் கவனிக்கணும்னு எங்க கரெஸ்பாண்டண்ட் பீட்டர் சார் சொல்லியிருக்கார். நீங்களும் நாளைக்கு வரலேன்னா எனக்கு ரொம்ப அவமானமா இருக்கும். இந்தச் சமயம் பார்த்து எனக்குக் கால் வீங்கிடுச்சி..."

சொல்லி முடிப்பதற்குள் பிஞ்சு மனம் பாகாய் உருகி அழுதுவிட்டது.

மனைவியிடம் மைத்ரேயியை ஒப்படைத்துவிட்டு இரண்டு தெருக்கள் தள்ளி ஓர் ஒண்டுக் குடித்தனத்தில் குடியிருந்த குருமூர்த்தியின் வீட்டைத் தேடிக் கிளம்பினேன்.– மறுதினத்துக்கு விடுப்பு விண்ணப்பம் கொடுக்க...

அப்பொழுதுதான் என் நினைவிற்கு வந்தது, அவன் வீட்டு இலக்கத்தைக் கேட்காமல் போனது. அவன் பலமுறை அழைத்தபோதும் ஒருநாள்கூட நான் அவன் வீட்டிற்குச் சென்றதில்லை.எப்படியும் சில அடையாளங்களைச் சொல்லி, வீட்டைக் கண்டுபிடித்துவிடலாம் என்ற நம்பிக்கையில் இப்போது நடையைக் கட்டினேன்.

என் நம்பிக்கை வீணாகவில்லை. ஐந்தே நிமிடத்தில் விசாரித்து, வீட்டைக் கண்டுபிடித்துவிட்டேன். கதவைத் தட்டியதும் 'க்ரீச்' என்ற ஒலியுடன் தகரக் கதவு திறந்து கொண்டது. நான் பேச ஆரம்பிப்பதற்கு முன்பே,

'ஏண்டா குரு, ஏன் எட்டு மணிக்கே திரும்பிட்டே? அரட்டைக்கு யாருமே கிடைக்கலியோ...?" என்று வயதான ஒரு மூதாட்டி கண்களை இடுக்கிக் கொண்ட என்னைப் பார்க்க முயன்றாள்.

பாவம் இரண்டு கண்களிலுமே பார்வையை இழந்திருந்தாள்.

அந்த வயதான மூதாட்டிதான் குருமூர்த்தியிக் தாயாக இருக்க வேண்டும்.

'ஐயோ பாவம்!' என்று அனுதாபப்பட்டுக் கொண்டே அறையின் இன்னொருபுறம் திரும்பிய நான் அங்கே எலும்பும் தோலுமாய்ப் பாரிச வாயுவில் முடங்கிக் கிடந்த கிழவரைக் கண்டேன்.

"தம்பி நீங்க யாரு? குருமூர்த்தியைப் பார்க்க வந்திருக்கீங்களா? இந்த 'மோடா'வில் உட்காருங்க" என்று சொல்லிக்கொண்டே, "அம்மாடி காயத்ரி, கொஞ்சம் இங்கே வாம்மா" என்று உள்புறம் நோக்கி ஒரு குரல் கொடுத்தார்.

"ஒன்றும் இல்லை. குருமூர்த்தியின் ஆபீஸில் நான் ஒன்றாக வேலை பார்ப்பவன். நாளைக்கு எனக்கு லீவு வேண்டும். இந்த லீவ் அப்ளிக்கேஷனை அவனிடத்தில் சேர்த்துவிட வேண்டும்"–என்று நான் சொல்லிக் கொண்டிருந்தபோதே, இருபது வயது இளநங்கை எங்கள் அருகில் வந்தாள். என்னை அறியாமல் அவளை ஏறிட்டு நோக்கிய நான், அடுத்த வினாடி அதிர்ந்துவிட்டேன். பாவம் இருபதுவயதிற்குள் மாங்கல்யத்தை இழந்து நிற்கும் இவளை, சமூகம் இன்னும் எவ்வளவு விபரீதமான சித்திரவதைக்கு உட்படுத்தப் போகிறதோ?



"வந்து... வந்து... அண்ணா இப்பொழுது வரும் நேரம் தான். அண்ணிக்கு நேற்று இரவு சற்று அதிகமாகிவிட்டது. தாம்பரம் சானடோரியம் டீ.பி.ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கிறார். கொஞ்ச நேரம் உட்கார முடிந்தால்..."

"நான் பிறகு வருகிறேன்.." என்று சொல்லிக் கொண்டே அந்தக் கொடுமைகளை மீண்டும் சந்திப்பதற்குச் சக்தியின்றி நடைப்பிணமாக வெளியே வந்தேன்.

தெருமுனையில் எதிர்பாராத விதமாகக் குருமூர்த்தியைச் சந்தித்தேன்.

"எங்கேடா இப்படி இந்தப் பக்கம் காற்றடித்தது?" என்றான் புன்னகையுடன்.

"உன் வீட்டுக்குத்தான் போய் வருகிறேன். உன் மனைவி டீ.பி. பேஷண்ட். உன் தாய் இரண்டு கண்களையும் இழந்தவள். உன தந்தைக்குப் பாரிச வாயு. எல்லாவற்றையும்விட உன் தங்கை இளம் வயதிலேயே விதவைக் கோலம். கடவுள் எப்படிப்பட்ட மகத்தான சோதனைகளை உனக்குக் கொடுத்திருக்கிறார். இவ்வளவு கொடுமையான நிலையிலும், நீ சிரிப்பும் கேலியுமாக..." என்றேன்.

"சிரிக்காமல் பின்னே அழச் சொல்கிறாயா? நானும் அழத் தொடங்கினால் என்ன ஆகும்?என் உள்ளமும் உடலும் பாதிக்கப்பட்டு, நானும் படுக்கையில் விழுந்து விட்டால். அப்புறம் என்னையே நம்பியிருக்கும் ஜீவன்களின் கதி என்ன ஆகும்? விதியை நொந்து அழுவதைவிட, விதியின் விளையாட்டை ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு, சிரித்துக்கொண்டே கடமையைச் செய்கிறேன். அவற்றை அதிகம் பாராட்டாமல் எளிமையாக எடுத்துக் கொள்ளும்படி கிண்டலும் கேலியுமாகச் சொல்கிறேன். நீங்கள் எல்லோரும் என்னை இரக்கமில்லாத அரக்கன் என்று திட்டுவதும் எனக்குத் தெரியும். அதற்காக நான் கவலைப்படவில்லை" என்று சொல்லிக் கொண்டே மீண்டும் புன்னகையை வீசினான்.

என்றும் காட்டி வந்த புன்னகையைத்தான் அவன் இன்றும் வெளிப்படுத்தினான்.ஆனால் இந்தப் புன்னகையில் இன்று எனக்கு வேறு பொருளல்லவா புலப்பட்டது! நேற்று வரை 'அலட்சியம்' என்று கறுவி வந்த நான், இன்று அதில் தெய்வ ஒளியைக் கண்டேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜோர்ஜ் கீற்றும் அவரது ஓவியங்களும்

கோ.றோ.கொன்ஸ்ரன்ரைன்


அண்மைக் காலங்களில் எம் மத்தியில் ஓவியக்கலை ஒரு புதிய உத்வேகத்தினைப் பெற்றிருப்பது போன்ற ஓர் உணர்வு. இளம் ஓவியர்களின் கண்காட்சிகளும் அறிமுகங்களும் எதிர்காலத்தில் ஓவியக் கலை எம்மத்தியில் செலுத்தவிருக்கும் செல்வாக்கிற்குக் கட்டியம் கூறுவது போல அமைந்து நிற்கின்றன. இவற்றின் விளைவாக ஓவியர்களையும் அவர்களது ஓவியங்களையும் பற்றி அறிந்து கொள்ளும் அவா இயல்பாகவே எம்முள் பிறக்கிறது.

இலங்கையில் ஓவியக் கலையில் முன்னணியில் திகழும் ஓர் ஓவியர் ஜோர்ஜ் கீற்(George-Keyt). தற்போது 92 வயதை எய்தியிருக்கும் இவர் தனது வாழ்நாள் முழுவதினையும் ஓவியக்கலைக்கு அர்ப்பணித்தவர். இவர் 1901ஆம் ஆண்டு கண்டியில் கல்வியில் சிறந்தோங்கிய குடும்பமொன்றில் பிறந்தார். சிறு வயதிலிருந்தே புத்தகங்கள் வாசிப்பதிலும் ஓவி யந்தீட்டுவதிலும் அதிக அக்கறை செலுத்தினார். நகர்ப் புறத்தில் வாழ்ந்த பொழுதும் இவரது தத்துவ ஈடுபாடும் கலை உந்தலும் இவரை அச்சூழலுடன் ஒட்டாது தனிமைப்படுத்தின.

வாழ்வின் மிக இளம் பருவத்திலேயே கிராமப்புற வாழ்வு இவரைக் கவரத் தொடங்கியது. இதன் காரணமாக இவர் தனது நகர்ப்புறச் சுற்றத்தைக் கைவிட்டு கிராமத்திற்குச் சென்றார். இங்கேதான் இவரது கலைவாழ்வு துலங்கத் தொடங்கியது. இவர் தனது 26 வயதில் தீவிர ஓவியராக மாறினார். ஓவியத்தில் மட்டுமன்றி சமஸ்கிருதம், பாளி ஆகிய மொழிகளையும் இவர் அறிந்திருந்ததன் பயனாக கீழைத்தேய தத்துவம், பௌத்தம், இலக்கியம் ஆகிய துறைகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். உண்மையில் இவரது ஓவியங்களைக் கூர்ந்து அவதானிக்கும் பொழுது தத்துவ உந்தல்தான் இவரது கலை வெளிப்பாட்டின் அடிப்படை என்பது புலனாகும்.

சிறந்த ஓவியரான இவர் ஓர் சிறந்த எழுத்தாளருமாவார். கவிதை, கட்டுரை, மொழி பெயர்ப்புகள் போன்ற படைப்புகளினூடாக தனது எழுத்தாற்றலினை ஆரம்ப காலங்களில் வெளிக்காட்டினார். ஆயினும் இவரது ஓவியங்கள் பெற்ற வரவேற்பினை இவரது ஏனைய படைப்புகள் பெறவில்லை. இதனால் இவர் காலப்போக்கில் ஓவியர் என்ற ரீதியிலேயே முக்கியத்துவம் பெறலானார்.

ஒரு கலைஞனின் உருவாக்கத்தில் மூன்று காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. முதலாவதாக பரம்பரை பரம்பரையாகக் கடத்தப்பட்டு வரும் கலைத்திறமைக்கான காரணி. இதனை பரம்பரை அலகுக் காரணி (Genetic Factor) என்பர். சாதாரணமாக இக்காரணிக்கும் நுண்ணறிவுக் (Intelligence) காரணிக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. இவரது குடும்பத்தை நோக்குகையிலும் அங்கே ஒரு நுண்ணறிவுக் காரணியின்செல்வாக்கினைக் காணக்கூடியதாக உள்ளது. அடுத்ததாக ஆரம்ப வாழ்க்கைப் பருவங்களில் (குழந்தைப்பருவம்) கொடுக்கப்படும் தூண்டுதல்களும், ஊக்குவிப்புகளும் கலைஞனின் உருவாக்கத்தில் செல்வாக்கு செலுத்த வல்லன. இது பெற்றோரினாலும் சகோதரர்களாலுமே கொடுக்கப்படுகிறது. இவரது வாழ்வில் இப்படியான ஊக்குவிப்பு குறிப்பிடக்கூடியளவிற்கு செல்வாக்கு செலுத்தியது எனக் கூறமுடியாது. மூன்றாவது காரணி சூழல். அதாவது சூழலின் தாக்கம். இவரது கலை வாழ்வில் இது மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது எனலாம். சாதாரணமாக கலைஞன் புறச் சூழல் நிகழ்வுகளால் பாதிக்கப்பட்டு அப்புறச் சூழல் நிகழ்வுகளை அல்லது அது அவனில் ஏற்



படுத்தும் தாக்கத்தினை தன் படைப்பின் கருவாகக் கொள்கிறான். மாறாக இவரது ஓவியங்களில் புறச் சூழலின் பாதிப்பினை மிக மிக அரிதாகவே காணக் கூடியதாயுள்ளது. அப்படியாயின் இவரது சூழற்காரணி எது? உண்மையில் இது அவரது அகத்திலே தான் இருக்கிறது. அவரது தத்துவங்கள், அவரது சமய நம்பிக்கைகள், அவரது இலக்கிய நாட்டம் இவையே அவரது தூண்டற் காரணிகள். இவையே அவரது ஓவியக் கருப் பொருட்கள். தத்துவச் செழுமையே அவரது ஓவியங்களின் தனிச்சிறப்பிற்கு முக்கிய காரணம். இதனை வேறு விதமாக கருதினால் இவரது ஓவியங்கள் சமூகம், காலம் ஆகிய நிலைகளைக் கடந்து நிற்கிறது எனலாம்.

இவரது ஆரம்பகால ஓவியங்கள் தத்ரூப வகையினைச் சார்ந்தவை. இவற்றில் பௌத்த மத செல்வாக்கு அதிகம் காணப்படுகிறது. இக்கால இவரது ஓவியங்களில் தனித்துவத் தன்மை குறைவு. இதற்குப் பிற்பட்டகால ஓவியங்களில் குறிப்பாக நாற்பதுகளின் பிற்பகுதியிலிருந்தே இவரது தனித்துவம் மிளிரத் தொடங்குகிறது. மேலைத்தேய நவீன ஓவியப்பாணியும் கீழைத்தேய தத்துவச் செழுமையுமே இவ்வோவியங்களின் சிறப்பம்சமாகும். இவ்வகையான ஓவியங்களே இவருக்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்ததுடன், இவரை ஒரு தனித்துவமான ஓவியராகவும் இனம் காட்டியது. இவரது அண்மைக்கால ஓவியங்கள் பெரும்பாலும் கோட்டுப் படங்களாக அமைகின்றனன. தடித்த கடுமையான நிறத்திலான கோடுகளையே இவர் இப்போது பாவிக்கிறார். இவரது தனித்துவப் பாதிப்பு இக்கால ஓவியங்களில் காணப்பட்டாலும் இவை ஒருவிதத்தில் இவரது தேய்வினைக் குறிக்கிறதோ என ஐயுற வேண்டியுள்ளது.

சாதாரணமாக ஓர் ஓவியத்தின் ஆழத்தினை மூன்று தளங்களில் நோக்கலாம். முதலாவதாக அந்த ஓவியம் முழுமையாகக் கூறும் கருத்து. ஏற்கனவே கூறியது போல இவரது ஓவியங்கள் பெரும்பாலும் தத்துவக் கருத்துக்களையே கொண்டுள்ளன. உதாரணமாகக் கூறுவதெனில் இவரது 'தெய்வீக இணைவு' (Devine Union) என்ற ஓவியத்தினைக் குறிப்பிடலாம். இது சாதாரணமாக உடலுறவினைச் சித்திரிக்கும் ஓர் ஓவியம். ஆனால் இதனூடாக இவர் காமம், காதல் ஆகியவற்றை தெய்வீகத் தன்மையுள்ளதாகக் காட்ட விழைந்துள்ளார். இதில் சிற்றின்பம் மீதான இவரது தத்துவக் கண்ணோட்டம் நன்கு தெரிகிறது. மேலும், இந்த ஓவியத்தை நோக்குகையில் ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் குறைநிரப்பிகள் என்ற கருத்தினை எம்முள் எழச் செய்கிறது. இதில் தான் இவரது தத்துவக் கண்ணோட்டம் முழுமையடைகிறது.

இரண்டாவதாக ஓர் ஓவியம் உணர்வு ரீதியான ஓர் தளத்தினைக் கொண்டிருக்கும். இது ஓவியத்திலுள்ள உருக்கள் தனித்தும் சேர்ந்தும் ஏற்படுத்தும் ஓர் உணர்வு ரீதியான

> இலங்கையில் ஓவியக்கலையில் முன்னணியில் திகழும் ஓர் ஓவியர் ஜோர்ஜ் கீற்(George-Keyt). தற்போது 89 வயதை எய்தியிருக்தம் இவர் தனது வாழ்நாள் முழுவதினையும் ஓவியக்கலைக்த அர்ப்பணித்தவர். இவர் 1901 ஆம் ஆண்டு கண்டியில் கல்வியில் சிறந்தோங்கிய தடும்பமொன்றில் பிறந்தார். சிறு வயதிலிருந்தே புத்தகங்கள் வாசிப்பதிலும் ஓவியந்தீட்டுவதிலும் அதிக அக்கறை செலுத்தினார். நகர்ப் புறத்தில் வாழ்ந்த பொழுதும் இவரது தத்துவ ஈடுபாடும் கலை உந்தலும் இவரை அச்சூழலுடன் ஒட்டாது தனிமைப்படுத்தின.

தாக்கம். இவரது ஓவியங்களில் வேகம், கோபம், காமம் போன்ற உணர்வுகள் அதிக செல்வாக்கினைப் பெற்றிருப்பதைக் காணலாம். இவரது எல்லா ஓவியங்களிலும் இத்தளம் தெளிவாக வெளிக் கொணரப்பட்டுள்ளது. ஆயினும் பொரளை கோதமி விகாரைச் சுவரோவியங்களை ஈண்டு குறிப்பிடலாம். குறிப்பாக புத்தர் ஞானம் பெறும் காட்சி, தீய சிந்தைகட்கு உருக் கொடுத்து அவற்றில் காட்டும் உணர்ச்சித் தளம் அற்புதமாக உள்ளது.

அடுத்ததாக ஓவியங்கள் மறை கருத்தினைக் கொண்டிருக்கும். சில வேளைகளில் ஓவியரின் மனத்திடை எழும் கருத்தினைத் தெளிவாக இனங்காணாது சித்திரிப்பதனால், இத்தளம் புலப்படாது போகலாம். அடிப்படையில் இவரது ஓவியங்கள் எளிமையானவை. விகாரங்களும் உருச்சிதைவுகளும் அரிதாகவே இருப்பதனால் மறைகருத்துக்கள் பற்றிய தேடலும் முக்கியத்துவம் பெறவில்லை. இதன் காரணம் இவரது எளிமையான ஒழிவு மறைவை விரும்பாத மனநிலை. இதனை இவரது தனிப்பட்ட வாழ்விலும் காணலாம். இவரது கிராமப்புற நாட்டத்திற்கும் இந்நிலையே காரணம் எனலாம். அத்துடன் இம் மனநிலையினை தனது ஓவியங்களின் நிர்வாண உருக்களாலும், ஒழிவு மறைவின்றிய வெளிப்பாடுகளாலும் பிரதிபலித்துள்ளார். இதனால் இவரது ஓவியங்கள் புலக்காட்சி உணர்விற்கும் (Visual Perception) அறிவு சார்ந்த மனக்கருத்திற்கும் (Conception) இடையில் பாரிய இடைவெளியினை ஏற்படுத்தி சிந்தனைக்குச் சவாலாக அமையவில்லை.

இவர் நிறங்களின் தேர்வினூடாகவும், கோடுகளினூடாகவும பல இடங்களில் மறை கருத்துகளை வெளிப்படுத்துகிறார். கடுமையான நிறங்கள் இவரது ஓவியங்களில் கருத்து ரீதியாக முக்கிய இடம் பெறுகின்றன. அதேவேளை மென்மையான இதமான உணர்வுகளை வெளிப்படுத்த கண்ணைப் பறிக்கும் இளநிறங்களையும் பாவித்துள்ளார்.

பெண்களின் உருக்களினூடாகப் பெரும் கருத்துப் பொதிவினைக் கொண்டுவரும் திறமை இவரிடமுண்டு. இதனால் இவரது ஓவியங்களில் பெண்களை அதிகமமாகக் காணலாம். இதற்கு உதாரணமாக கிறீஸ்து ராசா (Christ the king) என்ற சாதாரணமாகக் கிறீஸ்துவைச் சித்திரிக்கும் படங்களில் அவரது அப்போஸ்தலர்களே (ஆண்கள்) காணப்படுவர். ஆனால் இவரது கிறீஸ்து ராசாவில் அப்போஸ்தலர்களுக்குப் பதிலாகப் பெண்கள்தான் காணப்படுகிறார்கள்.

இவரது ஓவியங்களின் இன்னுமொரு குறிப்பிடத்தக்க அம்சம் உருச்செறிவு. வெளிகளை இவர் வெறுக்கிறார். வெளிகள் தோன்றும் இடங்களில் உருக்களும் கோடுகளும் அவற்றை நிரப்பப் பயன்படுகின்றன. இதனை கோதமி விகாரைச் சுவரோவியங்களில் நன்கு அவதானிக்கலாம். இடைவெளிகளை நிரப்பும் உருக்களும் கோடுகளும் நிறத்திலும் அமைப்பிலும் பிரதான உருக்களுடன் நன்கே ஒத்திசைகின்றன. இதனை இவரது 'வீணை வாசிப்பவர்' (Veena player) இல் அவதானிக்கலாம். அருகிலிருக்கும் இரண்டு உருக்களும் இலயிப்பினைத் துல்லியமாக வெளிக்காட்டப் பயன்பட்டுள்ளன. இதன்மூலம் இவர் தனது ஓவியங்களுடன் எவ்வளவு தூரம் ஒன்றி இருக்கிறார் என்பதினை நாம் அறியலாம்.

இவரது ஓவியக் கண்காட்சிகள் பலபாகங்களிலும் நடைபெற்றுள்ளன. ஆயினும் தமிழ்ப் பகுதிகளில் இவரது ஓவியங்களை மிக அரிதாகவே காணக்கிடைக்கிறது. 1947ஆம் ஆண்டு ஓவியர் S.R. கனகசபையின் முயற்சியால் இவரது ஓவியக் கண்காட்சியொன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இவரது ஓவியங்களைப் பற்றியும் இவரைப் பற்றியும் மேலும் அறிய பின்வரும் நூல்கள் பேருதவியாயிருக்கும்.

George Keyt-Martin Russell.

George Keyt-A Felicitation Volume.

George Keyt-A Life In Art.

## தடுமாறும் தமிழ் இனம்

M.T.செல்வராஜா.

இயற்கையின் அழகிற்கும் இதமான எழிலிற்கும்
ஈன்றெடுத்த பொழுதிருந்து இதயத்தைப் பறிகொடுத்தேன்
இனிய தமிழ் கவிதைக்கும் அமுதினிய மழலைக்கும்
தேன்இனிய தமிழிசைக்கும் கனிவோடு செவிமடுத்தேன்
கமல மதில் கொலுவிருந்து குமரிவடிவாக நிற்கும்
கலைமகளின் கையசைவில் கண்மூடி நிலைமறந்தேன்
கலகமதே கோலமாக குலமிழந்து கொலுவிழுந்து
கலங்குகின்ற எம்மவரால் கண்ணுறங்க நான் மறந்தேன்.

இளவயதில் மேதைகளாய் கணேசனும் வாகீசனும்
எழுச்சி பெற தமிழனென இம்மண்ணில் தலைநிமிர்ந்தேன்
இளையவர்கள் களம்புகுந்து வளர்ந்தமண்ணின் வளம் காக்கும்
தளராத நிலைகண்டு நிலமகளின் தாள பணிந்தேன்
மழலையினம் மனமுவந்து அழகுதமிழ் எழுதிவர
அழியாது எம்மொழியின் ஆயுளென அகமகிழ்ந்தேன்
எழில் தமிழை வளர்க்கவென்று கழகங்கள் பலவளர்ந்து
வளமிருந்தும் பிளவுபடும் பெரியோரால் தலைகுனிந்தேன்



இரக்க சுபாவம் மிக்கவனாம் அவன். ஒரு நாள் ஆமையொன்று அவன் கையில் சிக்கியது. 'சூப்' போட்டு சாப்பிடலாம் என்று அதை வீட்டுக்கு எடுத்து வந்தான். ஆனால் அதைக் கொன்ற குற்றத்துக்கு ஆளாக விரும்பவில்லை அவன். ஒரு பாத்திரத்தில் தண்ணீரைக் கொதிக்கவைத்தான். அதன் மீது குறுக்காக ஒரு கம்பியைப் படுக்கவைத்து ஆமையிடம் கூறினான்: "இந்தக் கம்பிமீது ஏறி ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்கு நீ சென்றுவிட்டால் உன்னை விட்டு விடுகிறேன்." ஆமைக்கு அவன் எண்ணம் புரிந்தது. சாக விருப்பமில்லை அதற்கு. மனோவுறுதியை வரவழைத்துக் கொண்டு கம்பியில் நடந்து அடுத்த முனைக்குச் சென்றுவிட்டது.

இரக்கசாலி கூறினான்: "பேஷ், பேஷ்! எங்கே இன்னொருதரம் செய்துகாட்டு பார்க்கலாம்."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எதுவரை தொடரும் மனிதரின் கதை?


## – GUNTER GRASS – குன்ரர் கிராஸ்

சென்றஇதழ்தொடர்ச்சி.....

*DDR* அரசுக்கு எதிரானவர்கள், அவர்கள் படைப்புக்கள் தலைமறைவில் எழுதப்படுகின்றன என்று இரண்டு ஜெர்மன் மொழிப் படைப்பாளிகளைப் பற்றிக் கருதினோம், அவர்களும் அவ்வாறே நினைத்திருப்பார்கள். ஆனால் அந்த இருவரும் அரசின் நெடுநாளைய/ நீண்டகால உளவாளிகள் என்பது பின்னர் தெரியவருகிறது. முழு மக்களையும் கண்காணிக்கும் ஒரு அமைப்பினுடைய ஆரம்பப் படியாக; அதற்கு இன்றியமையாத மூலமாகத் தணிக்கைத் திணைக்களமே இயங்குகின்றது. அதுவும் இலக்கியத்தை உற்பத்திசெய்கிறது. "இரட்டை வாழ்க்கை" என்பது சந்தர்ப்பவாதிகளின் போக்கிடமாகக் கூறப்பட்டாலும் இவர்கள் போக்கினை இரண்டக நிலையெனக் குறிப்பிட முடியாது. இவர்கள் வெறும் தணிக்கையாளர்கள், இலக்கியக்காரார் போலப் புத்தகங்கள் எழுதுகிறார்கள். ஒரு சில எழுத்தாளர்களை இங்கே குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி விசாரிக்க இது சரியான சந்தர்ப்பமாக எனக்குப்படவில்லை. அரச அதிகாரம் திருச்சபை அதிகாரம் என்பவற்றோடு பேச்சுச் சுதந்திரத்தின் பகைவர்களாக ஒரு சில தனித்தனி எழுத்தாளர்களும் இருக்கிறார்கள் என்பது நாம் மறந்துவிடுவது. எங்கோ ஒரு மூலையிற் கரையொதுங்கிக் கிடக்கும் பழைய அனுபவந்தான் இன்று புதிதாக தோன்றுகிறது. விட்டுக்கொடுப்பின், சமரசத்தின் ஆசைநாயகர்கள் என்று அறியப்பட்டவர்களின் முகத்திரைக்குப் பின்னால் அவர்கள் விட்டு வைக்காத, பொறுத்துக் கொள்ளாத அதிகாரத்தின் சேவகர்களாக மாறுகிறார்கள். இந்த நெகிழ்ச்சி நியமங்கள் பெரும்பாலும் ஒரு உயர் வகை நிராகரிப்பின் தாரளப் போக்குத் தளங்களில், அரசாதிகார நேரக்கட்டுப்பாட்டின் தலையீடு இல்லாவிட்டாலும், ஒரு மெல்லிய பயமுறுத்தற் தொனியுடன் நடைபெறுகின்றன.

இன்றைய சமகால இலக்கியங்களில் சமூகத்தின் மீதான நக்கீர விமர்சனப் பார்வைகள் பொதுவான அரசியல் சேற்றைத் தவிர்க்க முடியாதவையாக இருந்தால் "(கட்சி) நிலைப்பாட்டு அழகியலாக" முத்திரை குத்தப்பட்டு விடுவது இனியாவது தவிர்க்கப்பட வேண்டும்.

தங்கள் ஆத்மாவை திருப்திப் படுத்தக்கூடியதாக எழுதப்பட்டால் நிச்சயமாக, அரச அதிகாரமோ, மடாலய அதிகாரமோ மகிழ்ச்சியடைவார்கள். "கலை கலைக்காகவே" என்று கலைஞர்கள் தங்களின் சுயதிருப்பதிக்காக படைக்கின்ற ஆபத்தில்லாத படைப்புகளை விட ஏனையவற்றை இவர்களால் சகிக்க முடியாது. எப்போதும் மனிதவாழ்க்கையின் யதார்த்தமான போக்குகள் சீரழிந்து விடுகின்ற போது "கலை கலைக்காகவே" என்ற வாதம் நாகரிகமாக உருவெடுக்கிறது. உண்மையில் இன்று நாற்றமடிக்கின்ற யதார்த்தம் உள்ளடக்கத்தை விட்டு விலகி, வடிவ வாஞ்சைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கிறது. பார்க்கப் போனால் நிறம் பற்றியோ, சுருதி பற்றியோ,மொழியழகு பற்றியோ தான் இறுதியில் பிரஸ்தாபிக்கப் படுகிறது. உட்பொதிவு இல்லாமல் வெளி அழகு ஜெயிக்கிறது. இதனால் தணிக்கைக்கோ தடைக்கோ



பெரியதொரு அவசியமேற்படுவதில்லை. நவீனத்துவத்திற்குப் பிந்திய காலகட்டத்தில் எல்லாம் விரும்பியவாறு நடப்பதால் தணிக்கைகள் அதிகம் பயன்படுவதில்லை. கரைச் சலில்லாத இரகுவாகக் கையாளக் கூடிய, தமது கைகளை முத்தமிடத் தருகின்ற நோஞ்சான் இலக்கியங்கள், இவை தான் இந்த ஆட்சியாளர்களுக்குத் தேவைப்படுகிறது.

இருந்தாலும் ஏனைய எழுத்தாளர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இந்த எழுத்தாளர் பலருடைய படைப்புக்கள் இலகுவானதாகவும், தமாஷாகவும் எழுதப்பட்டாலும், வார்த்தைகள் அவை பல அர்த்தங்களைக் கொடுக்கக் கூடியவை. உயர்பீட மடாலய மீட்பர்களுக்கோ ஒரு வார்த்தை ஒரு கருத்தை மட்டும்தான் தரவேண்டும்.அது இல்லாதபோது அவர்களின் கோபத்தை இந்தப் படைப்புக்கள் சம்பாதிக்கின்றன. இந்த வகையில் சல்மான் றுஸ்டி இன்று எங்களை ஒன்றாக்கியுள்ளமை மிகவும் அரிதாக நடைபெறக்கூடிய ஒரு விடயம் தான். இதனை நாம் எமக்கேற்பட்ட பிரச்னையாக விளங்கிக்கொள்ளவேண்டுமென்பதை அவருக்கு ஏற்பட்ட நிலைமைகள் நம்மை எச்சரிக்கை செய்கின்றன. இந்த எழுத்தாளனை மிரட்டுவோர் எம்மைத்தான் மிரட்டுகிறார்கள். அவனை ஊமையாக்கி உயிரைப் பறித்துவிட விரும்புவோர் இறுதியில் எம்மையும் எம்குரலையும் உயிரையும் காவுகொள்ளவே என்பது எமக்குப்புரிகிறது. சல்மான் றுஸ்டியுடன் சேர்ந்து நாம் எல்லோரும் எச்சரிக்கப்படுகிறோம். இவரது நூலை ஜப்பானிய மொழியில் மொழிபெயர்த்தவர் கொல்லப் பட்டிருக்கிறார். இத்தாலிய மொழிபெயர்ப்புச் செய்தவர் தாக்கப்பட்டுத் துன்புறுத்தப்பட்டிருக்கிறார். இவர்களையும், றுஸ்டியுடன் சேர்த்து ஆபத்திற்கு முகங்கொடுக்கும் அனைவரையும் நாம் மறந்து விட முடியாது, மறந்துவிடக்கூடாது. உயர்பீட மடாதிபதிகளின் அதிகாரத்தை நாம் உடைத்தெறியப் போவதில்லை. அவர்கள் விதித்த மரண தண்டனையை நாம் இரத்து செய்ய முடியாது. கொல்வதற்கு அவர்கள் கொடுக்கும் சன்மானப் பணத்தின் பெறுமதியை நாம் இல்லாமற் செய்துவிடமுடியாது. அரசியல் வாதிகளோ, தொழில் அதிபர்களோ தங்கள் வியாபாரத்தையும், புகழையும் புறமொதுக்கி இது விடயத்தில் தலையிடப்போவதில்லை. தியமென் சதுக்கப் படுகொலைக்குப் பின்னரும் எவ்வாறு சீன அரசுடன் சுமூகமாக வியாபாரங்கள் செய்யப்படுகின்றதோ அவ்வாறே ஈரானுடனான வியாபாரத்திலும் அதனால் கிடைக்கும் இலாபத்திலுமேமேலே இவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். சிலவேளை தங்கள் இடங்களில் தொலைக்காட்சிகளில் தமது எதிர்ப்பைத் தெரிவிக்ககு கூடும். இதோடு இவர்கள் எதிர்ப்பு முடிந்து விடும்.

**ஜெர்மன் மொழி மூலத்திலிருந்து தமிழில்:**
**ந.சுசீந்திரன்**

றுஸ்டிக்கும் அவரது நூலை மொழி பெயர்ப்பவர்களுக்கும் விதிக்கப்பட்ட மரணதண்டனையின்அநியாயம் கால உதிர்வில், நாளாந்தக் கொலைகளில் எமது அக்கறையை வேறெங்கோ கரையொதுக்கி விடலாம். வருடாந்தம் உலகின் ஏழ்மைப் பரப்பான 3ம் உலகின் குழந்தைகளை மில்லியன் கணக்கில் கொள்ளை கொள்ளும் பட்டினிச்-சாவுகள், முதலாளித்துவத்தின் தவிர்க்க முடியாத பிரச்னையாக பட்டினி என்பது பாலகர்கொலையாக சட்டப்பிரகடனம் செய்தாற் போல் இருக்கின்றபோது தனியொருவனின் உயிரைப்பற்றி ஏன் கவலைப்பட வேண்டும் என்ற வாதம் இந்த விடயத்தை மழுங்கடிக்கலாம். இது கடைசியுமில்லை.

இலக்கிய வாதிகளுக்கிடையிலான இழுபறிகள் எங்களுக்கிடையில் மேலும் விரிசலை ஏற்படுத்தலாம் அதுவே சல்மான் றுஸ்டியைக் காட்டிக்கொடுக்கக் காரணமாகவும் அமையலாம்.தாம் விரும்பும் இலக்கியப்படைப்புக்கு எம்மை நிர்ப்பந்திக்கலாம்.

இந்த விடயத்தை நான் மிகவும் சுருக்கமாகவே இங்கே முன்வைக்கிறேன் என்பதை நீங்கள் விளங்கிக்கொள்வீர்கள். இலக்கியவரலாறு என்பதே, அதன் பிரத்தியேகமான தணிக்கை அத்தியாயத்தை எடுத்துக்கொண்டால், சின்ன அல்லது பெரிய காட்டிக்கொடுப்புக்களின் சரித்திரமே. விட்டுக்கொடுப்புக்கான எங்கள் கூக்குரல் ஒருபோதும் கட்டுப்படுத்தும் எதிர்க்குரல் இல்லாமல் இருந்ததில்லை என்பதை 17ம், 18ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் நிகழ்த்த ஐரோப்பிய "அறிவொளி இயக்கத்தின்" எழுச்சியினால் விவேகமாகியும், அதன் ஆழுமைக் குட்பட்டும் போன மைந்தர்கள் நாம் நன்றாகவே அறிவோம். என்ன செய்வதென்று அடிக்கடி தெரியாது இறுதியாகப் பகுத்தறிவின் அடிப்படையில் மன்னிப்பை வேண்டி நின்ற சல்மான் றுஸ்டிக்கு எங்கள் முன்னோடி Michel de Montaigneஅவர்களின் எழுத்துக்களுக்கு என்ன நடந்ததென்று தெரியவேண்டும்.

கத்தோலிக்க நிர்வாகம் அவன் எழுத்தைத் தடைசெய்தது. கணித மேதை, சமயத் தத்துவவியலாளன் (1623–1662)உம் கத்தோலிக்கச் சீர்திருத்த இயக்கத்தைச் சேர்ந்த Jansenisten- ஜன்சனிஸ்டுக்களும் அது சரிதான் என்றார்கள். "அறிவொளி இயக்க" எழுச்சியின் மூலவர்களான, பிரெஞ்சுத் தத்துவ வியலாளன்- ஒரு யுகத்தின் எழுத்தாளர் Voltaire (1694–1778)உம் மற்றவர்களும் இவன் எழுத்தைப் போற்றிப்புகழ்ந்தார்கள்.

ஆனால் பிரெஞ்சு தத்துவ வியலாளர், "அறிவொளி" இயக்க வாதி (1712–1778 அறிவின் ஆட்சி குறித்த இவரின் கோட்பாட்டில் இவற்றின் கொடூரம், பிரான்சியப் புரட்சியின் ஆரம்பத்தின் பின்னால் அதிபயங்கரவாதமாக வெளிக்கிளம்பியது.) இயற்கை நீதியினதும் வழக்கமான மரபுகளினதும் அடிப் படையில் இன்னும் உறுதியாகச் சொல்லப்போனால் இன்று வரை ஆட்சி புரியும் மரபுகளின் அடிப் படையில் வின் படைப்பை நிராகரித்தார்.


புத்தி ஜீவித வலிப்புக் குணத்திற்கு வேண்டுமானால் விசேடமாக ஜெர்மனியில் பாடம் கற்ற இன்னுமோர் உதாரணத்தைக் கூறலாம்: Henrich Heineக்கும் August von Platen(1796–1835; ஜெர்மன் மொழிக்கவிஞர், நாடகாசிரியருக்கும் இடையில் நடந்த சண்டைகள். இரண்டு படைப் பாளிகள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் தன்னினச் சேர்க்கையாளன் என்றோ யூதன் என்றோ ஒருவர் மீது மற்றொருவர் வக்கரித்த சேற்றை வாரியிறைத்தார்கள். இந்த வார்த்தையாடல்களில் Heineயின் கூர்மையான வார்த்தைகள் இறுதியில் August von Platenéச் சாகடித்தன.

நாங்கள் எழுத்தாளர்கள் தவறு விட மாட்டோம் என்று கூறவில்லை. உலக இலக்கியம் என்பது புனித மானவர்களால் உருவாக்கப்பட்டதுமல்ல. நாங்கள் பல்லாண்டு நெடுகிலும் பயமுறுத்தப்பட்டிருந்தாலும் தடையாலும், தணிக்கையாலும் துன்பப்பட்டாலும், அனைத்துக்கும் முகங் கொடுத்து, நுட்பமான தேடலாமோ அல்லது தன்முனைப்பு ஆர்வத்தினாலோ வார்த்தை விளை நிலங்களைப் பெருக்கியுள்ளோம். எங்களை அர்ப்பணித்து நாங்கள் தியாகியாக வேண்டுமென்று கடவுளின் அசரீரி எதுவும் எங்களுக்குக் கட்டளையிடவில்லை. இருப்பினும் சரித்திரத்தால் தாக்கப்பட்ட எழுத்தாளர்களைச் சமூகம் எப்பொழுதும் காலக் கரைவிற்குப் பின்னால் விருப்போடு தியாகிகளாகத் தன்னகத்தே சுவீகரித்துக் கொள்கிறது. ஒன்று மட்டும் உறுதி: நாங்கள் ஆர்வத்தோடு இழிவுபடுத்துகிறோம். இந்த வரிசையில் உட்கார்ந்திருக்கும் போது நக்கலாகக் கதைக்க விருப்பமிருக்கும். தாம் தவறே விடமாட்டோம் என்றெண்ணுபவர்களைப் பார்த்து நகைக்கிறோம். எழுத்துப் படிவங்கள் ஒவ்வொன்றிலும் பொறுமையான எங்கள் விடாமுயற்சி யாவரும் அறிந்ததே அதேவேளை வழக்கமாகவே நாங்கள் உதிரிகள், இந்த உதிரிகளின் சக்தியும் பொறுமையும் இன்னும் அதிகாலத்திற்கு வேண்டுமானால் மேலும் தொடர்ச்சியாக சல்மான் றுஸ்டியைப் பாதுகாப்பதற்குப் பயன்படமாட்டாதா?

இப்பொழுது எழுத்தாளர்கள் றுஸ்டிக்குக் கடிதங்களை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இவை ஆங்காங்கே அனேக தினசரிகளில் பிரசுரமாகின்றன. இது உலகம் முழுக்கப் பரவவேண்டும்; உலகெங்கிலுமுள்ள எழுத்தாளர்கள் இவ்வாறு எழுதுவார்கள் என்று நாம் எதிர்ப் பார்க்கலாம். முதலில் எழுதப்பட்ட கடிதங்களில் ஐரோப்பிய அடியைச் சேர்ந்த தென்னாபிரிக்க சமூக ஆய்வு நாவலாசிரியை கடந்த ஆண்டு நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் Nardine Gordimer(1923) அவர்களின் கடிதத்தில் "நீங்கள் உங்கள் நூலில் வருகின்ற எந்தப் பாத்திரத்தினூடாகவும் இரத்தக் களரி ஏற்பட வேண்டுமென்று கேட்கவுமில்லை; விரும்பவுமில்லை. இவை விளங்கிக் கொள்ளப்படாமலேயே உங்கள் உயிரைப் பறிக்க நினைப்பது, மனிதகுலத்திற்கு எதிராகச் செய்யப்பட்ட அநீதி, இந்த மண்ணின் எப்பாகத்திலும் அடக்கு முறையை மீறி சுதந்திரமான இலக்கியப் பிறப்பில் இது தன் நிழலைப் பதித்தே தீரும்" என்று குறிப்பிட்டுள்ளார். இதைத்தான் நாமும் விரும்பி வேண்டி நிற்கிறோம். கலை இலக்கியத்தின் நெகிழ்ச்சியான மரபுக்குள், எப்பொழுதும் புதிய மரபுகளையே நாடுகின்ற சுதந்திரமான படைப்புக்கள் எழுதப் படவேண்டும். உண்மையில் மற்றவர்களால் எது முடியாதோ அதைத் தான் நாம் விரும்புகின்றோம்! அப் படித்தான் சல்மன்!

–கதை சொல்லுதல், பழைய கதைகள் அதனை என்றும் வேறு வகையிற் சொல்லுதல்– எங்களின் இந்தக் கதைகள் வெளிப்படையாகச் சொல்லப்படுவது மட்டுமல்ல, எல்லோர் முன்னிலையிலும் திறந்து வைக்கப்படுகிறது.சரியாகச் சொல்லியிருக்கிறேன் என்ற இறுமாப்பிலோ திமிர்த்தனத்திலோ அல்ல, மாறாகத் தோல்வியின்/ வீழ்ச்சியின் பரிகசிப்பில் அவை வாழ்கின்றன. கதை சொல்பவன் ஒருபோதும் வெற்றியாளனின் பக்கம் நிற்க முடியாது. இழப்புகளிலேயே அவன் வாழ்கிறான். என்றும் தோல்விகளிலேயே அமிழ்ந்து போனவர்கள் தமது தோல்விகளை அவன்பால் சுமத்தி விடலாம்.ஏதோவொரு பட்டஞ் சூட்டி, குரல்வளை நெரிப்புக்கு நியாயம் தேடுவது முல்லாக்களுக்குக் கைகூடியிருக்கலாம்.

இன்னும் துரிதமாக, இந்தக் கதை சொல்பவனின் குரல்வளையை நெரித்தும் விடலாம். அப்போது மனிதர்களின் கதையைச் சொல்வதற்கு ஆள் இல்லாமற் போகுமென்பதல்ல, அதோடு மனிதர்களின் கதையே விடுகின்றன.



**குமுதன் சிறீஸ்கந்தராசா மிருதங்க அரங்கேற்றம்**

திரு.மாணிக்கம் யோகேஸ்வரன் அவர்களின் 13 வயது நிரம்பிய மாணவரான குமுதனின் அரங்கேற்றம் கடந்த நவம்பர் 14ம் தேதி பொது நல மன்ற மண்டபத்தில் நடைபெற்றது. திரு.மாணிக்கம் யோகேஸ்வரன் வாய்ப்பாட்டு, ஸ்ரீ பி.கே. சந்திரசேகர் வயலின், திரு பாஸ்கரன் ஸ்ரீகரம் கடம், திரு.அம்பலவாணர் ஸ்ரீநிவாசன் மோர்சிங், ஸ்ரீ உதயன் சண்முகநாதன் தம்புரா வாசித்தனர், செல்வன் குமுதன் நியூமோல்டனைச் சேர்ந்த டாக்டர் சிறீஸ்கந்தராசா தம்பதிகளின் புதல்வன் ஆவார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 3 சொல்லாரம்

திருவரங்கன்

டிசம்பர் 8ந் திகதிக்கு முன் கிடைக்கும் விடைகளில் முதலாவதாக எடுக்கப்படும் சரியான விடைக்கு

## பரிசு 20 பவுண்கள்

*இடமிருந்து வலம்:*

1. கற்புக்கு இலக்கணம் இந்த பதிவிரதை, வானத்தில் நட்சத்திரமாக உயர்ந்த இடம் பெற்றவர். திருமணக் கோலத்தில் இருக்கும் பெண் அம்மி மிதித்து பார்ப்பது.(5)
7. காதலி காதலனைக் காணாமல் இது செய்வான் என்று ஏங்குவாள். "இது செய்வான் மோகனரூபன் என காத்திருந்த" என்பது கண்ணதாசன் பாடல். படம்: பொன்னூஞ்சல்.(4)
9. பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவர்.(6)
10. மழைக்காலத்தில் தெருக்களில் சேறோடு இருப்பது.(3)
14. கணிதத்தில் தீர்க்க வரும் இது பின்னங்களாகவும் இருக்கலாம். எண்களாகவும் இருக்கலாம்.(4)
16. தலைக்கு வந்தது இதனோடு போனது என்பார்கள்.(5)
18. தெற்கிலிருக்கும் குன்றம்- "இதன் மேகம் தூதுவனாக என்னிடம் சேர்த்தது உன்னை" என்பது "செந்தமிழ் பாடும் சந்தனக்காற்று கவிஞர் பாடல். படம்: வைரநெஞ்சம்.(4)
20. முதன் முதலில் சந்திப்பவர்களை தெரிந்தவர்கள் செய்வது.(5)

*வலமிருந்து இடம்:*

5. நங்கையை விரும்பும் ஆண்மகனை இப்படி அழைப்பார்கள்.(3)
6. ஒற்றுமையாக இருப்பது.(2)
13. அவர்களது.(2)
15. சந்திரன்.(3)

*மேலிருந்து கீழ்:*

1. திருக்குறள் நலம் புனைந்துரைத்தல் அதிகாரத்தில், இந்தப் பூவும் அன்னத்தின் இறகும் மாதர் கால்களின் மென்மையைக் காட்ட ஒப்புவமையாகின்றன.(5)
2. முனிவர்கள் செய்வது.(3)
3. ஆண்டாளை ஆட்கொண்ட ஆண்டவன்.(4)
4. எதிரியை நோக்கியபடி ஓரடி பிந்தி வைப்பது.(5)
5. சிரிக்க வைக்கும் ஆபரணம்.(2)
8. நீண்ட ஆயுளுடன் இது செய்யவேண்டுமென வரம் பெறுவர் - ஆசீர்வதிக்கப்படுவர்.(2)
9. ஆறு- இது எங்கே போகிறது கடலைத்தேடி என்பது கவிஞர் பாடல். படம்: இருவர் உள்ளம்.(2)
11. வாசலில் இருப்பது.(3)
12. சிவபெருமான் கையிலிருக்கும் வாத்திய கருவி.(4)
17. உச்சி முதல் இது வரை என்பார்கள்.(3)

*கீழிலிருந்து மேல்:*

6. மரத்திற்கு இன்னொரு சொல்(2)
15. மறக்காமல் இருப்பது.(2)
18. விளக்கமானது- பாலும் இத்தகையதேனும் என்றாள் தமிழ் மூதாட்டி.(2)
19. மலர்களில் இருக்கும் மது என்பார்கள்.(2)
20. கடலிருந்தால் இது இருக்கும் தனிமையில்லை என்பது கண்ணதாசன் பாட்டு. படம்: மீண்ட சொர்க்கம்.(2)
21. மல்லிகை இந்த மலர் பூப்பந்தல்- மரகத மாணிக்க பொன்னூஞ்சல் என்பது வாலியின் பாடல்.(3)

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | 3 | | 4 | | 5 |
| | 6 | | 7 | | 8 | | | |
| | | 9 | | | | | | |
| 10 | 11 | | | | | | | 12 |
| | 13 | | | | 14 | | | |
| | | | 15 | | | | | |
| | | | | 16 | | | 17 | |
| 18 | | | | | | | | |
| | 19 | | 20 | | 21 | | | |

உங்கள் முகவரி

பெயர்..................................

முகவரி ..................................

..................................

..................................

தொலைபேசி..................................

**சொல்லாரம்**

**1 க்கான சரியான விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சி | ல | ப் | ப | தி | கா | ர | ம் |
| தி | த் | சி | | | ர | | | |
| | தி | | | | வி | ண் | மீ | ன் |
| வ | ர | ம் | பு | | ய | | ண் | |
| | ம் | | ண் | | ம் | | டு | |
| | | க | ணி | | | வ | ம் | ச |
| | உ | ப | ய | ம் | | ய | | க |
| | த | ட | ம் | | அ | ல் | லி | |
| ப | டு | | | லை | க | | ப | |

சொல்லாரம் - 1 க்கான சரியான விடை அனுப்பிய அதிர்ஷ்டசாலி வாசகர்

**செல்வி க கௌரி**


**லண்டன் S.E.6**

**பதில் அனுப்பவேண்டிய முகவரி**

சொல்லாரம் – **3**

THAMIZHOSAI
253,Western Avenue
**London W3 0PP**

# ஒரு பாலையின் குரல்



கோடை தகிக்கிறது நெடுநாளாய்
ஆழக்கிணற்றிலும் நீர் வற்றிப் போச்சு
அள்ளப் போட்ட வாளி வேறுமனே வருகிறது
கோடை தகிக்கிறது நெடுநாளாய்.

வானில் ஒரு பொட்டுமேகம் கிடையாது
பாலை வெளியில் விரல்நீட்டி
பரிதவிக்கின்றன மொட்டை மரங்கள்
கனவுகள் உதிர்ந்த மனிதரைப்போல.

கோடை தகிக்கிறது நெடுநாளாய்.

நிழலற்று அலையும் மனிதர்கள்
இதோ, சுவடிழந்து செல்கிறார்
எனது இமைத்தெரு கடந்து.
விழிஎறியும் திசை எங்கும்
கானல் நீரள்ளி நீள்கின்ற கைகள்
ஒரு கையும் இவர்க்கென்று
உயிர்த்தண்ணி ஏந்தவில்லை.

கோடை தகிக்கிறது நெடுநாளாய்

சுற்றிலும் நெருப் பெரிவு
மானுடர்கள் தீக்குளிப்பு
பச்சையாய் உடம்புகள்,
பச்சையாய் உணர்வுகள்.
கனவுகள் பச்சையாய்
எரிகின்றன; கரிகின்றன.

கண்ணெதிரே கானலில்
இந்தப் பூமியே எரிகின்ற பிணமாகி
தீ நிழல் விழுத்த
எதிர்காலம்-
பாம்புதிர்த்துப்போன செட்டை மினுங்கலென.....
கோடை தகிக்கிறது நெடுநாளாய்

தகிக்கிற கோடையில்
பறவையின் நிழலும் பரிதவிக்கும்
மொட்டை மரத்தடியில்
கூன் விழுந்த மானுடம் குந்தியிருக்கிறது
பூதாகரமாய் நீளுகிற பாலையின்
நெடுமூச்சாய் அலைகாற்று அதன்
ஜீவனைச் சுடுகிறது.

யாரேனும், யாரேனும்
இதயத்தைப் பிழிந்தெனினும்
உயிர்த்தண்ணி வார்க்கும் வரை,
முதுகு பிளந்தெனினும்
முள்ளெலும்பை ஊன்றுகோலாய் வழங்கும் வரை
காத்திருக்கும்
இந்த நீண்ட நெடும் பாலை வழி.
யாரேனும்.... யாரேனும்....?

சு.வில்வரத்தினம்

# லண்டன் நிகழ்வுகள்....

நவம்பர் 28 சனி
மாலை 7.00மணி

ஷேக்ஸ்பியர் நடனக் கல்லூரி அளிக்கும் நடன நிகழ்ச்சி. நிருத்தப் பெரியார் வெங்கடாசலபதியும் அவரது சிஷ்யை ஷேனிகா ஷேக்ஸ்பியரும்.

இடம்:**Claremont High School**
**Claremont Avenue**
**Kenton Harrow**
**Middlesex.**
விபரங்கட்கு: 081 951 0594

நவம்பர் 28 சனி
மாலை 6.30மணி

மட்டு. பல்கலைக்கழக அபிவிருத்தி சபை **(BUDS)**யின் ஒன்று கூடலும் இராப்போசனமும்.

இடம்: **Alperton High School**
**Ealing Road**
**Wembley**
விபரங்கட்கு: 081 886 7530
081 561 7629

நவம்பர் 28 சனி
மாலை 7 மணிக்கு

லண்டன் கர்நாடக இசைப்பள்ளி மாணவர்களின் நிகழ்ச்சி.

இடம்: **Riverdale Hall**
**The Lewisham Centre**
**Rennell Street**
**SE 13**
விபரங்கட்கு: 081 692 0823
081 697 5181
081 690 0401

நவம்பர் 29 ஞாயிறு
மாலை 5.30 மணி

மாவீரர் தினம்

இடம்: **Walthamstow Assembly Hall**
**Forest Road**
**London E17**
விபரங்கட்கு: 081 071 8371

டிசம்பர் 4 வெள்ளி
மாலை 7.30 மணி

நிருத்தப் பெரியார் ஸ்ரீ.ஜே. வெங்கடசலாபதி, செல்வி.லூட்மிலா வின்டலன் உடன் இணைந்து அளிக்கும் பரதநாட்டிய நிகழ்ச்சி.

இடம்: **Surbiton Assembly Hall**
**Maple Road, Surbiton,**
**Surrey.**
விபரங்கட்கு: 081 769 6297
081 677 5497

டிசம்பர் 6 ஞாயிறு
மாலை 5.45 மணி

தமிழ் அநாதைகள் அறக்கட்டளை நிதி திரட்டலுக்காக, நிருத்தப் பெரியாரும் வெங்கடசலாபதி- அவரது மாணவி ஷேனிகா ஷேக்ஸ்பியருடன் இணைந்து வழங்கும் நடன நிகழ்ச்சி

இடம்: **Ealing Town Hall**
**Uxbridge Road,**
**london W5**
விபரங்கட்கு: 081 908 3540
081 422 0012

**இப்பகுதியில் தங்கள் "நிகழ்ச்சிகளை பிரசுரிக்க" விரும்பும், ஸ்தாபனங்கள் எமக்கு விபரங்களை அனுப்பி வைக்கவும்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாரபலன்

-வனவாசி-

## மேடம்

உங்களுடைய சிரமங்கள் தீரும் நேரம். சபையில் புகழ் கிடைக்கும். செலவு அதிகமானாலும் காரியம் நிறைவேறும். தூரத்துச் செய்திகளும் சந்தோசம் தரும். பிராணிகளால் தொந்தரவு உண்டு.அலுவலக விஷயங்களில் கவனம் தேவை. வாரக் கடைசியில் விருந்தினர் வருகை உண்டு. பொதுவாக இது ஒரு நன்மையான வாரமே.

## இடபம்

ராசியாதிபதி சுக்ரன் 8ம் இடத்தில் சஞ்சரிப்பதால் பல பிரச்னைகளை சந்திக்க வேண்டிய சூழ்நிலை. வீண் அபவாதம் ஏற்படும். குடும்பத்திலும் குழப்பம் ஏற்படும். தக்க சமயத்தில் பெரியோர் உதவி உண்டு. வாரக்கடைசியில் சுமுக நிலை ஏற்பட்டு மனம் அமைதி அடையும். பொதுவாக மிக கலக்கமான வாரமே இது.

## மிதுனம்

அஷ்டமத்துச்சனி அடிக்கடி தொல்லை கொடுத்தாலும் பொறுமையாக சமாளிக்கிறீர்கள். காரிய வெற்றி உண்டு. வாரக்கடைசியில் உடல்நலக் குறைவும் மனைவியிடத்தில் அநாவசியமான வம்பும் ஏற்படும். சொல்வதைக் கேட்டு நடப்பது சாலச் சிறந்தது. பணம் ஒத்துவராது. பொதுவாக பாதகமான வாரம்தான் இது.

## கர்க்கடகம்

சிந்தித்து செயல்பட வேண்டிய வாரமிது. காதல் விஷயம் கைகூடினாலும், காலில் கூட விழ வேண்டி வரலாம். (யார் காலிலோ) சந்திராஷ்டம் காலமாகிற வாரமத்தியில் கடும் சோதனைகள் உண்டு. கணவன் மனைவி உறவில் ஊடலும் கூடலும் உண்டு. கூடவே செலவும் உண்டு. சிலருக்கு சகோதரர்களால் நன்மையும் உண்டு. பொதுவாக இன்பகரமான வாரமே இது.

## சிங்கம்

பிரச்னை தீருமென்றீர்கள். இல்லையே அது ஒரு தொடர்கதை தான். கவலை வேண்டாம். வாரக் கடைசியில் வசந்தம் வீசும். காரியத்தடைகள் உண்டு. புதிதாக எதுவும் தொடங்க வேண்டாம். பிறகு பிள்ளையார் பிடித்த கதைதான். புதிய நண்பர்களிடம் கவனமாக இருக்கவும். உடல் நிலையிலும் சுகவீனம் உண்டு. பொதுவாக மந்தமான வாரம் தான் இது.

## கன்னி

குடும்பத்தில் கலகலப்புக்கு பஞ்சமில்லை. விருந்தினர் வருகை உண்டு. உல்லாசப் பயணம் சுகம் தரும்.வரவேண்டிய பொருள் வந்து சேராது. சகோதரர்களிடம் கருத்து வேற்றுமை ஏற்படும். அதிக செலவு உண்டு. வாலிபர்களுக்கு வாரக் கடைசியில் வசந்தமான கடைக்கண் பார்வை கிடைக்கும்.வரமும் கிடைக்கலாம். பொதுவாக நல்ல கலகலப்பான வாரமே.

## துலாம்

துன்பங்கள் தீரும் நேரம் துயரங்கள் கரையும். வாரக்கடைசியில் சந்தோஷ சமாசாரம் தெரிய வரும். பழைய நண்பர் பரிச்சயமாவார். பணவசதியும் பரவாயில்லை. உடல் நலம் தான் சற்று சுகமில்லை.கவனம் தேவை.அலுவலகத்தில் புதிய அனுபவம் கிடைக்கும். வாரக்கடைசியில் பரபரப்பு உண்டு.பொதுவாக இந்த வாரம் இனிமையான வாரமே.

## விருச்சிகம்

வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டு. அலுவலகத்திலும் ஆதரவு கிடைக்கும். மனைவிக்கு உடல் சுகவீனம் ஏற்படும். உறவினர் உறவு கெடலாம். அதிகம் பேசினால் ஆபத்துதான். வாரக் கடைசியில் வேண்டாத வம்பு உண்டு. பிள்ளைகளினாலும் தொந்தரவு ஏற்படும். பொதுவாக பிரச்னையான வாரம் தான் இந்த வாரம்.

## தனு

மனதில் ஒரு வித பயம் இருந்து கொண்டே இருக்கும். காரிய வெற்றி உண்டு. கவலைப்படாதீர்கள். குடும்பத்தில் அமைதி உண்டு. புதிய முயற்சிகள் பலனளிக்கும். நண்பர்களால் உதவி கிடைக்கும். நல்ல காலமும் பிறக்கும்.வெகுநாள் விவகாரத்தில் நல்ல தீர்ப்பு வரும். பொதுவாக மனதிற்கு இதமளிக்கும் வாரமே இது.

## மகரம்

தள்ளிப் போட்டுக் கொண்டு போன காரியங்கள் விரைவாக நிறைவேறும். கல்யாண வலையில் கண்டிப்பாக மாட்டும் நேரம். வேலை வேண்டுபவர்களுக்கு வெற்றி உண்டு. வாரக்கடைசியில் வியப்பான நோக்கு உண்டு. திடீர் அதிர்ஷ்டம் அடிக்கும். சிலருக்கு பொருள் இழப்பு ஏற்படும். காரணம் பேராசையே. பொதுவாக விறுவிறுப்பான வாரம் தான் இது.

## கும்பம்

குடும்பத்தில் உள்ளவர்களால் குழப்பமேற்பட வாய்ப்பு உண்டு. அதிக செலவும் உண்டாகலாம். மனஅமைதி குலையும். கணவன் மனைவி உறவில் விரிசல் ஏற்படும். அது குழந்தைகளையும் பாதிக்கும். பொது நலச்சேவை ஆறுதல் தரும். வாரக் கடைசியில் புதிய பதவி கிடைக்க வாய்ப்பு உண்டு. பொதுவாக இது ஒரு சஞ்சலமான வாரமே.

## மீனம்

தொடர்ச்சியான வேலைப் பளுவினால் அலுப்பு உண்டாகும். சோம்பல் ஏற்படும் தாய் தந்தையர்கள் உடல்நலக்குறைவுண்டாகும். உத்யோக மாற்றம் வரலாம். வாரக் கடைசியில் மனைவி மூலம் அதிர்ஷ்டமும் திடீர் பொருள் வரவும் உண்டாகும். தொழில் துறையில் மந்த நிலைமை இருக்கும். பொதுவாக மிகவும் தளர்ச்சியான வாரம் தான் இது.

# சந்திரலேகா அசிட் வீச்சு

## நால்வர் மீது குற்றப் பத்திரிகை தாக்கு

மே மாதம் பத்தொன்பதாம் தேதி எழும்பூர் ரயில்வே நிலையம் அருகே மிக்க சனநாட்டமான இடத்தில் ஐ.ஏ.எஸ் அதிகாரி சந்திரலேகா மீது அசிட் வீசப்பட்டது.

இது தொடர்பாக பொலீசார் கோட்டில் குற்றப்பத்திரிகை தாக்குதல் செய்துள்ளனர். காரின் பின் இருக்கையில் இடதுபக்கமாக அமர்ந்திருந்த இவர் முகம் கழுத்து, முதுகுப்புறம் ஆகிய பல்வேறு இடங்களில் எரிவுக்காயங்கள் ஏற்பட்டது.

சம்பவம் நடந்த இடத்திலேயே பிடிபட்ட ஒருவரின் வாக்குமூலப் படியே மற்றும் இருவர் கைது செய்யப்பட்டனர். இவர்களின் வாக்குமூலப்படி பம்பாயில் இந்த சதித்திட்டம் தீட்டப்பட்டது என்றும் சுர்லா என்னும் நான்காவது நபர் இப்போதும் பம்பாயில் தேடப்பட்டு வருகிறார் என்றும் செய்திகள் கூறுகின்றன.

இக்குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதை பொலீசார் இரகசியமாகவே வைத்திருந்த இந்த நேரத்தில் எழும்பூர் நீதிபதி சத்தியமூர்த்தி இடமாற்றம் செய்யப்பட்டு, புதிதாக பெருநகர நீதிபதி சுரேஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வழக்கில் கைதாகி நிபந்தனை பிணையில் உள்ள மூன்று பேருக்கும் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. அவர்களுக்கு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற சந்திரலேகா கடந்தமாதம் சுகமாகி வீடு திரும்பினார்.

இவர் இப்போது ஐ.ஏ.எஸ் பதவியை ராஜிநாமா செய்துவிட்டு, தீவிர அரசியலில் இறங்கியுள்ளார். ஜனதா கட்சியின் மாநில தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

தம்மீது அசிட் வீசப்பட்டது. சம்பந்தமாக மத்திய உள்துறை அமைச்சர் சவானைச் சந்தித்து, இந்த வழக்கை மத்திய புலனாய்வுத் துறை பொலீசார் விசாரிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

VASAN LITHO PRINTER

We are offering Four Colour Offset
Litho Printing, Design, Typesetting and Desk Top Publishing
using quality equipment such as
ORIGINAL HEIDELBERG
Printing Machines

QUALITY, SPEED & COMPETITIVE RATES

Business Cards, Letterheads, Complement slips,
N.C.R Forms, Leaflets, Invoices
Wedding Cards, Menu Cards, Show Tickets,
Labels, Envelopes, Calendars,
Programme Brouchures, Magazines and Books.

ALL PRINTING SERVICES UNDER ONE ROOF
60 P PITCAIRN ROAD, MITCHAM, SURREY CR4 3LL
TEL: (081) 640 4366



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்